
Since -1998
STUDY CENTRE
TNPSC EXAMS
24 YEARS OF
EXCELLENCE
சுவடுகள்
(நடப்புக்கால நிகழ்வுகளின் தொகுப்பு)
தமிழ்நாடு
மாநிலங்கள்
தேசியம்
இந்தியா மற்றும் உலகம்
சர்வதேசம்
திட்டங்கள்
பாதுகாப்பு
அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்
சுற்றுச்சூழல்
பொருளாதாரம்
நீதிமன்ற தீர்ப்புகள்
மாநாடுகள் மற்றும் உச்சி மாநாடுகள்
விருதுகள்
பிரபலமானவர்கள்
புத்தகங்கள் மற்றும் ஆசிரியர்கள்
விளையாட்டுகள்
தரவரிசை மற்றும் அறிக்கைகள்
JANUARY
முக்கிய தினங்கள்
நினைவில் நின்றவர்கள்
DAILY NEWS
NEWS
மாதத்தின் முக்கிய செய்திகள்
அறிவு
நியமனங்கள்
குழுக்கள்
செயலிகள் வலைதளங்கள்
விடுபட்டவை

# அன்றாட நடப்பு நிகழ்வுகள் - ஜனவரி 1-31, 2022


| வ. எண். | தலைப்புகள் | பக்கம் எண். |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு | 3 |
| 2 | மாநிலம் | 14 |
| 3 | தேசிய செய்திகள் | 17 |
| 4 | நீதிமன்றத் தீர்ப்புகள் | 23 |
| 5 | சர்வதேச செய்திகள் | 24 |
| 6 | இந்தியா மற்றும் இதர நாடுகள் | 26 |
| 7 | மாநாடுகளும் உச்சி மாநாடுகளும் | 27 |
| 8 | பாதுகாப்பு | 28 |
| 9 | பொருளாதாரம் | 30 |
| 10 | நியமனங்கள் | 33 |
| 11 | விருதுகள் | 34 |
| 12 | புகழ்பெற்ற நபர்கள் | 36 |
| 14 | புத்தகங்களும் ஆசிரியர்களும் | 37 |
| 15 | அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல் | 38 |
| 16 | விளையாட்டு | 42 |
| 17 | இரங்கல் செய்திகள் | 44 |
| 18 | அறிக்கைகள் | 45 |
| 19 | தரவரிசைப் பட்டியல் | 47 |
| 20 | முக்கிய தினங்கள் | 48 |

# தமிழ்நாடு

- **புதிய காவல் ஆணையரகங்கள்**

✓ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் - ஜனவரி 1, 2022 அன்று சென்னை புறநகர்ப் பகுதிகளில் புதிய ஆவடி மற்றும் தாம்பரம் மாநகராட்சிகளுக்கான புதிய காவல் ஆணையர் அலுவலகங்களைத் தொடங்கி வைத்தார்.

✓ தாம்பரம் ஆணையரகத்துக்கு எம். ரவி, கூடுதல் காவல் துறைத் தலைவர் தலைவராக இருப்பார்.

✓ ஆவடி ஆணையரகத்துக்கு சந்தீப் ராய் ரத்தோர், கூடுதல் காவல் துறைத் தலைவர் தலைவராக இருப்பார்.

- **நிகர பூஜ்ஜியம் (Net Zero)**

- குத்தம்பாக்கம் மற்றும் கிளாம்பாக்கம் ஆகிய இடங்களில் அமையவுள்ள இரண்டு புதிய புறநகர் பேருந்து முனையங்கள் - வளாகத்தில் உருவாக்கப்படும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்தி, சென்னையில் நிகர பூஜ்ஜியத்திற்கு அருகில் இருக்கும் முதல் பொதுக் கட்டிடங்களாக இருக்கும்.
- இவை சூரிய சக்தியை உற்பத்தி செய்யும் மையங்களாக செயல்படும். இவை அங்குள்ள மின் வாகனங்களை ரீசார்ஜ் செய்வதற்கும் பயன்படுத்தப்படும்.

- **ராணி வேலு நாச்சியார்**

✓ ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போர் தொடுத்த தமிழ்நாட்டின் சிவகங்கை அரசி, ராணி வேலு நாச்சியாரின் பிறந்த நாளான 03 ஜனவரி 2022 அன்று அவருக்கு பிரதமர் நரேந்திர மோடி அஞ்சலி செலுத்தினார்.

✓ இந்தியாவில் கிழக்கிந்திய கம்பெனியுடன் போர் தொடுத்த முதல் இந்திய இராணி இவர் ஆவார்.

✓ இவர் வீரமங்கை என்று தமிழர்களால் அழைக்கப்படுகிறார்.

- **வேளாண்-தொழில்துறை பாதைத் திட்டம் (Agro-industrial Corridor Project)**

✓ வேளாண் தொழில்துறை பாதைத் திட்டம் அடுத்த ஆண்டு தொடங்கும் என்று ஆளுநர் ஆர். என். ரவி புதன்கிழமை அன்று தெரிவித்தார். இத்திட்டம், காவிரி டெல்டா மாவட்டங்களில் வேளாண்மை சார்ந்த தொழில்களை ஊக்குவிப்பதன்மூலம் தொழில்துறை உட்கட்டமைப்பு பற்றாக்குறையை சரி செய்யும்.

✓ மருத்துவ சாதனங்கள் துறையானது சூரிய உதயத் துறையாக அடையாளம் காணப்பட்டு, இந்தத் தொழிலுக்கான விரிவான சுற்றுச் சூழல் அமைப்பை உருவாக்குவதற்காக, 150 ஏக்கரில் மருத்துவ சாதனப் பூங்கா நிறுவப்பட்டு வருகிறது.

✓ தூத்துக்குடியில் 1,100 ஏக்கர் பரப்பளவில் நாட்டின் முதலாவது பெரிய மரச்சாமான்கள் பூங்கா அமைக்கப்படும் என்றும் ஆளுநர் கூறினார். இந்த இரண்டு பூங்காக்கள் மூலமாக சுமார் 3 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

✓ மாநில அரசு ஜனவரி 12ஆம் தேதியை ‘உலகத் தமிழ் புலம்பெயர்ந்தோர் தினம்’ என்று அறிவித்துள்ளது. இந்த நாள் ஒவ்வொரு ஆண்டும் சிறப்பு நிகழ்வுகளால் குறிக்கப்படும்.

- **கிராம திட்டமிடல் சட்டம், 1971 (Country Planning Act, 1971)**
  - ✓ தமிழ்நாடு அரசு – தமிழ்நாடு நகர மற்றும் கிராம திட்டமிடல் சட்டம், 1971இல் திருத்தம் செய்து, அதன்மூலம் திட்ட அனுமதிகளின் செல்லுபடி காலத்தை ஐந்து ஆண்டுகளில் இருந்து எட்டு ஆண்டுகளாக நீட்டிக்க முடிவு செய்துள்ளது.

- **சென்னை விமான நிலையம்**
  - ✓ விமானப் போக்குவரத்து பகுப்பாய்வு நிறுவனமாகிய, 'சிரியம்'படி, 2021ஆம் ஆண்டில், சரியான நேரத்தில் சிறப்பான செயல்திறனுக்கான மிகச் சிறந்த (டாப்) 10 உலகளாவிய பட்டியலில், இந்தியாவில் இருந்து, சென்னை விமான நிலையம் மட்டுமே இடம் பெற்றுள்ளது.
  - ✓ இந்தப் பட்டியலில் சென்னை 8வது இடத்தில் உள்ளது.

- **புதிய உள்ளாட்சி அமைப்புகளை ஏற்படுத்துவதற்கான மசோதாக்கள்**
  - ✓ மாநிலத்தில் மேலும் சில மாநகராட்சிகளை உருவாக்குவதற்கான மசோதாக்களை மாநில அரசு மாநில சட்டப்பேரவையில் வியாழக்கிழமை அன்று அறிமுகப்படுத்தியது.
  - ✓ நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, கடலூர், காஞ்சிபுரம், சிவகாசி, கரூர், தாம்பரம் மற்றும் கும்பகோணம் ஆகிய மாநகராட்சிகளை உருவாக்குவதற்கான மசோதாக்களை தாக்கல் செய்தார்.
  - ✓ மாநிலத்தில் நகரமயமாக்கல் பெற்றுள்ள வேகத்தைக் கருத்தில் கொண்டு, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளை மறுசீரமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

- **திருக்குறள் மாநாடு 2022**
  - ✓ தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி- கோவையில் ஜனவரி 7, 2022 அன்று சர்வதேச திருக்குறள் மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.
  - ✓ இந்தத் திருக்குறளை உலகம் முழுவதும் பிரபலம் அடையச் செய்யும் வகையில், மொழிபெயர்ப்பாக மட்டுமில்லாமல், ஆன்மீகக் கண்ணோட்டத்துடன் கூடிய கூடுதல் விமர்சனங்களையும் அளிக்க வேண்டும் என்று ஆளுநர் கேட்டுக் கொண்டார்.
  - ✓ திருக்குறளின் பெருமையை அங்கீகரித்ததற்காகவும், அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்ததற்காவும் முன்னாள் சென்னை ஆட்சியர் பிரான்சிஸ் வைட் எலிசின் பணிகளை அவர் நினைவுகூர்ந்தார்.

- **தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம்**
  - ✓ கூட்டுறவு சங்கங்களின் பதவிக் காலம் 3 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது.
  - ✓ கூட்டுறவு சங்கங்களின் இயக்குநர்கள் குழுவின் பதவிக் காலத்தை 5 ஆண்டுகளில் இருந்து 3 ஆண்டுகளாகக் குறைக்கும் வகையில் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கச் சட்டம் 1983ஐ மேலும் திருத்துவதற்கான மசோதாவை தமிழக சட்டப் பேரவை வெள்ளிக்கிழமை நிறைவேற்றியது.

- **மின்-வாடகை**
  - ✓ விவசாயிகள் தங்களுக்குத் தேவையான இயந்திரங்களை வாடகைக்குப் பெற உதவும் வகையில், கைபேசி செயலியான மின்-வாடகையை முதல்வர் மு.க.ஸ்டாலின் ஜனவரி 8ஆம் தேதி தொடங்கி வைத்தார்.
  - ✓ விவசாயிகள் விவசாய அலுவலகங்களுக்குச் செல்லாமல் தங்களுக்குத் தேவையான இயுந்திரங்களை பதிவு செய்து கொள்வதற்கு இந்த மின்-வாடகை செயலி உதவும்.

- **நெம்மேலி மூன்றாவது சுத்திகரிப்பு (உப்பு நீக்கும்) ஆலை**
  - ✓ நெம்மேலி மூன்றாவது சுத்திகரிப்பு ஆலை ஏப்ரல் 2023க்குள் தயாராகிவிடும்.
  - ✓ ரூ.1,259.38 கோடி மதிப்பிலான இந்தத் திட்டமானது, அம்ருத் (AMRUT) திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகிறது மற்றும் 10.6 ஏக்கர் நிலத்தில் KfW என்ற ஜெர்மன் வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் 100 mld திறன்கொண்ட உப்பு நீக்கும் ஆலை அமைக்கப்பட்டுள்ள அதே இடத்தில் அமைக்கப்படுகிறது.

- **அனைவருக்குமான அடிப்படை வருமானம் (Universal Basic Income)**
  - ✓ முதலமைச்சரின் பொருளாதார ஆலோசனைக் குழு உறுப்பினராக உள்ள அரவிந்த் சுப்பிரமணியன், அனைவருக்கும் அடிப்படை வருமானத்தை அளிக்கும் திட்டத்தை மாநில அரசு அறிமுகப்படுத்துவதற்கு தான் ஆதரவாக இருப்பதாகக் கூறினார்.
  - ✓ குறைந்தபட்ச அடிப்படை வருமானம் என்ற எண்ணம் தமிழ்நாட்டின் சமூகப் பாதுகாப்பு வலையமைப்புத் திட்டத்தை நிறைவு செய்யவும், தனிநபர்கள் தங்கள் திறனை உணரவும் உதவும். தொழில்நுட்பம் மற்றும் திறமை இருந்தபோதிலும், இந்தியாவில் உள்ள 80 யூனிகார்ன்களில் சென்னையில் மூன்று யூனிகார்ன்கள் (1 பில்லியன் டாலருக்கும் அதிகமான மதிப்பு) மட்டுமே உள்ளன.

- **மத்திய செம்மொழி தமிழ் நிறுவனம் (Central Institute of Classical Tamil) மற்றும் 11 புதிய மருத்துவக் கல்லூரிகள்**
  - ✓ பிரதமர் நரேந்திர மோடி, 2022ஆம் ஆண்டு ஜனவரி 12ஆம் தேதி, சென்னையில் மத்திய செம்மொழி தமிழ் நிறுவனத்தின் புதிய வளாகத்தைத் திறந்து வைத்தார்.
  - ✓ இந்த மத்திய செம்மொழி தமிழ் நிறுவனம், செம்மொழித் தமிழை மேம்படுத்துவதில் ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதில் தனது பங்களிப்பை அளித்து வருகிறது.
  - ✓ தமிழகம் முழுவதும் 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளையும் பிரதமர் நரேந்திர மோடி காணொலி காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

- **பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் சுகாதார உள்கட்டமைப்பு இயக்கம்**
  - ✓ ஜனவரி 12 அன்று, பிரதமர் நரேந்திர மோடி – பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் சுகாதார உட்கட்டமைப்பு இயக்கத்தின்கீழ், அடுத்த ஐந்து ஆண்டுகளில் தமிழகத்திற்கு 3,000 கோடி உதவி வழங்கப்படும் என்று அறிவித்தார்.
  - ✓ சுகாதார உட்கட்டமைப்பு மற்றும் சுகாதார ஆராய்ச்சி, குறிப்பாக மாவட்ட அளவில் உள்ள முக்கியமான இடைவெளிகளை நிரப்புவதற்கு ஒன்றிய அரசின் இந்த உதவி பயன்படுத்தப்படும்.

- **இயற்கை வளங்கள்**
  - ✓ மாநில அரசு – சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் தொடர்பான பொருள்களைத் தொழில் துறையிலிருந்து பிரித்து, இயற்கை வளங்கள் என்ற ஒரு புதிய துறையை உருவாக்கியுள்ளது.
  - ✓ இந்தப் புதிய ஆணையின்படி, புதிதாக அமைக்கப்படும் துறையின் கட்டுப்பாட்டின்கீழ், துறைகளின் தலைவர்கள், புவியியல் மற்றும் சுரங்க இயக்குநரகம், தமிழ்நாடு கனிமங்கள் மற்றும் தமிழ்நாடு மேக்னசைட் ஆகியவை கொண்டு வரப்படும்.
  - ✓ இந்தப் புதிய துறைக்கு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைவராக இருப்பார்.

- **தந்தை பெரியார் மற்றும் டாக்டர் அம்பேத்கார் விருது**
  - ✓ ஜனவரி 13 அன்று, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் - திராவிட அறிஞரும் வரலாற்று ஆசிரியருமான கே. திருநாவுக்கரசுக்கு சமூக நீதிக்கான மாநில அரசின் தந்தை பெரியார் விருதையும், ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி கே. சந்துருவுக்கு டாக்டர். அம்பேத்கார் விருதையும் அறிவித்தார்.

- **புதுப்பிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம்**
  - ✓ கோவில் பூசாரிகள் மற்றும் ஊழியர்களுக்கான புதுப்பிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஜனவரி 13ஆம் தேதி தொடங்கி வைத்தார்.
  - ✓ அர்ச்சகர்கள் மற்றும் கோவில் ஊழியர்களுக்கான ஓய்வூதியத்தை 1,000 ஆக உயர்த்தி மாநில அரசு அறிவித்துள்ளது.

- **புதிய டாப்ளர் வானிலை ரேடார் (New Doppler Weather Radar)**
  - ✓ ஒன்றிய அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் புவி அறிவியல் துறை இணை அமைச்சர் டாக்டர். ஜிதேந்திர சிங் - பள்ளிக்கரணையில் உள்ள தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவன வளாகத்தில் நிறுவப்பட்ட புதிய டாப்ளர் வானிலை ரேடாரை ஜனவரி 14 அன்று திறந்து வைத்தார்.
  - ✓ புதிய கருவியானது, இரட்டை துருவப்படுத்தப்பட்ட டாப்ளர் வானிலை ரேடார் ஆகும், இது சென்னையைச் சுற்றி 150 கிமீ சுற்றளவு கொண்ட பகுதிக்குச் சேவை செய்யும் திறன் கொண்டது.

- **ஜான் பென்னிகுயிக்**
  - ✓ முல்லைப் பெரியாறு அணையை 1895-ல் கட்டிய ஆங்கிலேய பொறியாளர் கர்னல் ஜான் பென்னிகுயிக்கின் சிலை, இங்கிலாந்தில் உள்ள அவரது சொந்த ஊரான கேம்பர்லியில் உள்ள பூங்காவில் மாநில அரசால் நிறுவப்படும் என்று ஜனவரி 15ஆம் தேதி முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார்.
  - ✓ பென்னிகுயிக்கின் பிறந்த நாளான ஜனவரி 15 அன்று இதை அறிவிப்பதில் தாம் மகிழ்ச்சி அடைவதாக முதல்வர் ஒரு அறிக்கையில் தெரிவித்தார்.
  - ✓ அவர் கட்டிய அணை தற்போது தமிழக அரசால் இயக்கப்படுகிறது.

- **குமரி அனந்தன்**
  - ✓ ஜனவரி 15, தமிழ்நாடு அரசு – 2021ஆம் ஆண்டுக்கான பெருந்தலைவர் காமராஜர் விருதுக்கு காங்கிரஸ் மூத்த தலைவர் குமரி அனந்தனை தேர்வு செய்தது.
  - ✓ இந்த அறிவிப்பினை வழங்கியபோது, அகில இந்திய தமிழ்ச்சங்க பேரவை தலைவர் மீனாட்சிசுந்தரத்துக்கு, இந்தஆண்டுக்கான அய்யன் திருவள்ளுவர் விருது வழங்கப்படும் என்றும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார்.
  - ✓ மேற்கண்ட ஒவ்வொரு விருதும் ஒரு இலட்சம் ரொக்கப் பரிசு, தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டுப் பத்திரம் ஆகியவற்றைக் கொண்டதாகும்.

- **புவிசார் குறியீடு**
  - ✓ கும்பகோணம் வெற்றிலை, தோவாளை மாணிக்க மாலை ஆகியவற்றுக்கு புவிசார் குறியீடு வேண்டப்பட்டுள்ளது.
  - ✓ கும்பகோணம் வெற்றிலை மற்றும் தோவாளை மாணிக்க மாலை ஆகிய இரண்டு பிரபலமான தமிழக தயாரிப்புகளுக்கு புவிசார் குறியீடு கோரி, சென்னையில் உள்ள புவிசார் குறியீடுகள் பதிவகம் விண்ணப்பங்களைப் பெற்றுள்ளது.

- **மாநகராட்சிகளின் மேயர்கள்**
- ✓ ஜனவரி 17ஆம் தேதி, மாநில அரசு – மாநராட்சி மேயர்களுக்கான இட ஒதுக்கீடுகளை அறிவித்தது.
- ✓ திங்கட்கிழமை அரசு வெளியிட்டுள்ள அறிவிக்கையில் உள்ள இடஒதுக்கீட்டின்படி, வரும் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில், சென்னை மற்றும் தாம்பரம் மாநகராட்சிகள், பட்டியல் சாதி பெண்களை மேயர்களாகத் தேர்வு செய்ய உள்ளன.
- ✓ ஆவடி மேயர் பதவி பட்டியல் சாதி (பொது) வேட்பாளருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதர ஒன்பது மாநகராட்சிகளின் மேயர் பதவிகள் பெண்களுக்கு (பொது) ஒதுக்கப்பட்டுள்ளன.

- **மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனம் (Central Institute of Classical Tamil)**
- ✓ மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனம் - அடுத்த கல்வியாண்டில் (2022-23) தென்கிழக்கு ஆசிய நாடுகளில் உள்ள முக்கியப் பல்கலைக் கழகங்களில் நான்கு செம்மொழித் தமிழ் இருக்கைகளை நிறுவத் திட்டமிட்டுள்ளது.
- ✓ தமிழ் மக்கள் தொகை அதிக உள்ள மற்றும் தமிழ்நாட்டுடன் பழங்கால கலாச்சாரத் தொடர்பு உள்ள நாடுகளில் தமிழ் இருக்கைகள் அமைக்கப்படும்.

- **மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனம் எட்டு புத்தகங்களை வெளியிட்டுள்ளது**
- ✓ சென்னையில் உள்ள மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் வெளியிட்ட 8 புத்தகங்களை, முதல்வர் மு.க. ஸ்டாலின், திங்கட்கிழமை பெரும்பாக்கத்தில் உள்ள அதன் புதிய வளாகத்திற்குச் சென்றபோது வெளியிட்டார்.
- ✓ அந்த நூல்களாவன: தொல்காப்பிய ஆய்வு, தெய்வச் சிலையார் உரைநெறி, ஐங்குறுநூறு குறிஞ்சி, ஐங்குறுநூறு பாலை, வாய்மொழி வாய்பாட்டுக் கோட்பாட்டு நோக்கில் சங்க இலக்கியம், புதிய நோக்கில் களப்பிரர் வரலாறு, திராவிட ஒப்பீட்டுத் தமிழ் இலக்கணம் - 2 மற்றும் தமிழின் ஒரு வரலாற்று இலக்கணம் ஆகும்.
- ✓ 2010 முதல் 2019 வரையிலான ஆண்டுகளுக்கான கலைஞர் மு. கருணாநிதி செம்மொழி விருது, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் ஜனவரி 22ஆம் தேதி நடைபெறும் விழாவில் வழங்கப்படும் என்று அவர் அறிவித்தார்.

- **தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் (Tamil Nadu Adi Dravidar Housing Development Corporation)**
- ✓ தமிழ்நாடு அரசு – தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் தலைவராக உ. மதிவாணனை நியமித்து ஆணையிட்டுள்ளது.
- ✓ இந்த முகமை 1974ஆம் ஆண்டு அப்போதைய முதல்வர் கருணாநிதியால் தொடங்கப்பட்டது.
- ✓ பட்டியலின பழங்குடியினர் மற்றும் பட்டியல் சாதியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள், திறன் மேம்பாடு மற்றும் பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்தும் நோக்கத்துடன் இது அமைக்கப்பட்டது.

- **பெருநகர சென்னை மாநகராட்சி**
- ✓ பெருநகர சென்னை மாநகராட்சி – 50 விழுக்காட்டிற்கும் அதிகமான வார்டுகளை பெண்களுக்கு ஒதுக்கிய முந்தைய உத்தரவை ரத்து செய்து விட்டு, 100 வார்டுகளை பெண்களுக்காக ஒதுக்கியுள்ளது.
- ✓ புதிய ஆணையின்படி, 16 வார்டுகள் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு (பெண்கள்), 84 வார்டுகள் பெண்கள் (பொது) மற்றும் 16 வார்டுகள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (பொது) என ஒதுக்கப்பட்டுள்ளன.

- ✓ பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழுள்ள –சென்னை, தாம்பரம் மற்றும் ஆவடி ஆகிய மூன்று மாநகராட்சிகளின் மேயர்களும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் சென்னை மற்றும் தாம்பரம் மாநகராட்சிகள் தங்களது முதல் மேயர்களைத் தேர்ந்தெடுக்க உள்ளன.

### ➢ திட்டங்களைக் கண்காணிப்பதற்காக மாநில திட்டக் குழு

- ✓ மாநிலத்தின் வளர்ச்சிக்கு விரிவான ஆலோசனைகளை வழங்குமாறு மாநில திட்டக்குழு உறுப்பினர்களுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் செவ்வாய்க்கிழமை அன்று அழைப்பு விடுத்தார். அரசு செயல்படுத்தி வரும் நலத் திட்டங்கள் அடித்தட்டு மக்களைச் சென்றடைந்ததா என்பதை கண்காணிக்க வேண்டும் என்று அவர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.
- ✓ வாழ்க்கைத் தரம், ஆயுட்காலம், கல்வி, குழந்தை வளர்ப்பு, வறுமை ஒழிப்பு, பொது சுகாதாரம், மனித உரிமைகள், சமூக நீதி மற்றும் விளிம்புநிலை சமூகங்களின் நலன் போன்ற பல்வேறு அம்சங்களில் வளர்ச்சியை எட்ட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.
- ✓ அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியை உறுதி செய்வதற்கான வழிகாட்டுதல்களைக் கொண்டு வருமாறு ஆணையத்தை ஊக்குவித்த முதலமைச்சர், 'நமது வளர்ச்சி சமமாக பகிரப்படவில்லை என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும்' என்று சுட்டிக்காட்டினார்.
- ✓ 'தொழில்வளர்ச்சி மாவட்டங்களுக்கு இடையே மாறுபடுகிறது. அதேபோலத்தான் கல்வியும் மாறுபடுகிறது. ஒரு சில மாவட்டங்களில் வறுமை குறைவாக இருந்தாலும், மற்ற மாவட்டங்களில் அதிகமாக உள்ளது. நிதிநிலைமையைப் பற்றி உங்களுக்கு நன்கு தெரியும். நிதியை எவ்வாறு சேமிப்பது என்பது குறித்த உங்கள் ஆலோசனைகள் எங்களுக்குத் தேவைப்படுகின்றன. பத்திரப்பதிவு மற்றும் கலால் வரி மூலம் மட்டுமே வருவாய் கிடைக்கிறது. சுற்றுலா, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள். கைவினைப் பொருட்கள் மற்றும் கைத்தறி போன்ற துறைகளில் இருந்தும் வருவாய் ஈட்ட வேண்டும்'

### ➢ குடியரசு தின விழா கொண்டாட்டங்கள்

- ✓ சென்னையில் கோவிட் பாதிப்பு அதிகரித்து வருவதால், தமிழக அரசின் குடியரசு தின விழாவில் இந்த ஆண்டு அரசுத்துறை ஊர்திகள் எதுவும் இடம் பெறாது.
- ✓ மாறாக, ஒன்றிய அரசால் நிராகரிக்கப்பட்ட மாநில அரசின் அலங்கார ஊர்தி சென்னை காமராஜர் சாலையில் விடப்படும். இதில் சுப்பிரமணிய பாரதியார், வ.உ. சிதம்பரம், வேலு நாச்சியார் மற்றும் மருது சகோதரர்களின் உருவங்கள் காட்சிப்படுத்தப்படும்.
- ✓ இரண்டு அலங்கார ஊர்திகளில் மாற்றங்கள் செய்யப்படும். மூன்றாவது ஊர்தியில் 'சுதந்திரப் போராட்டத்தில் தமிழ்நாடு' என்ற கருப்பொருளை உணர்த்தும் வகையில் தமிழ்நாட்டின் சுதந்திரப் போராட்ட வீரர்களை நினைவுகூர்வதாக அமையும்.

### ➢ காவல் ஆணையம்

- ✓ புதிய காவல் ஆணையம் அமைப்பதற்கான உத்தரவை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வழங்கினார். ஓய்வுபெற்ற சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி சி.டி. செல்வம், இந்த ஆணையத்தின் தலைவராக இருப்பார்.
- ✓ இந்த ஆணையம் காவல்துறை பணியாளர்களின் நலனுக்கான நடவடிக்கைகளையும், காவ்லதுறை தொடர்பான அம்சங்களையும் ஆய்வு செய்து, குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் தன்னுடைய அறிக்கையை சமர்ப்பிக்கும்.
- ✓ காவல்துறையை மேம்படுத்துதல், காவல்துறை மற்றும் பொதுமக்களுக்கு இடையேயான உறவுகளை மேம்படுத்துதல், இணைய குற்றங்களைத் தடுத்தல் மற்றும் மனிதாபிமான அணுகுமுறையுடன் காவல்துறையை மேம்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை இந்த ஆணையம் பரிந்துரைக்கும்.

## ➢ கொற்கை

- ✓ சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தூத்துக்குடி மாவட்டம் கொற்கை கடற்கரையில் உள்ள கடலில் உளவுத் துறை ஆய்வு, இந்திய கடல்சார் பல்கலைக் கழகம் மற்றும் தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து தமிழ்நாடு தொல்லியல் துறையால் மேற்கொள்ளப்படும்.
- ✓ பிப்ரவரி முதல் வாரத்தில் இருந்து, மாநிலம் முழுவதும் ஏழு இடங்களில் தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். சிவகங்கை மாவட்டத்தில் கீழடி மற்றும் அருகிலுள்ள இடங்களில் (கொந்தகை, அகரம் மற்றும் மணலூர்) அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும் (கட்டம் 8), தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள சிவகலை (3ஆம் கட்டம்), அரியலூர் மாவட்டத்தில் உள்ள கங்கைகொண்ட சோழபுரம் (இரண்டாம் கட்டம்), கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள மயிலாடும்பாறை (இரண்டாம் கட்டம்), விருதுநகர் மாவட்டத்தில் வெம்பக்கோட்டை (1ஆம் கட்டம்), திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள துள்ளுக்கார்பட்டி (1ஆம் கட்டம்) மற்றும் தருமபுரி மாவட்டத்தில் பெரும்பாளை (1ஆம் கட்டம்).

## ➢ CLAPP

- ✓ ஜனவரி 21ஆம் தேதி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் - கிளாப் (CLAPP) என்ற ஒரு புதிய ஆன்லைன் செயலியை தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்.
- ✓ இந்த கிளாப் செயலியைப் (முழுமையான விடுப்புச் செயலி) பயன்படுத்தி, அனைத்து நிலைகளிலும் உள்ள காவலர்களும் இப்போது விடுப்புக்கு விண்ணப்பித்து உடனடியாக அனுமதி பெறலாம்.
- ✓ இந்த புதிய கைப்பேசி செயலியானது தாமதங்கள், கட்டாய நிராகரிப்புகள் அல்லது பாரபட்சம் ஆகியவற்றைத் தடுக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் விடுப்பு இசைவு அளிக்கும் செயல்முறையில் அதிக வெளிப்படைத் தன்மையை உறுதி செய்கிறது.

## ➢ அலங்காநல்லூர்

- ✓ ஜனவரி 21ஆம் தேதி, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் - உலகப் புகழ்பெற்ற ஜல்லிக்கட்டு நிகழ்வை ஆயிரக் கணக்கான மக்கள் காணும் வகையில், உலகத் தரம் வாய்ந்த வசதிகளுடன்கூடிய அதிநவீன அரங்கை அலங்காநல்லூரில் மாநில அரசு கட்டும் என்று கூறினார்.

## ➢ மின்-சேவை சேவைகள் (E-Seva Services)

- ✓ ஜனவரி 22 அன்று, தமிழக அரசு – தனியார் பிரவுசிங் மையங்களில் மின் சேவை சேவைகளை குறைந்த செலவில் வழங்குவதாக அறிவித்துள்ளது.
- ✓ தனியார் பிரவுசிங் மையங்களில் மின்-சேவை சேவைகளை வழங்குவதற்கான 36 உரிமங்களை தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டி. மனோ தங்கராஜ் வழங்கினார்.
- ✓ தற்போது, இத்துறையின்கீழ், மாநிலத்தில் 2,457 மின்-சேவா சேவை மையங்கள் உள்ளன.

## ➢ செம்மொழி தமிழ் விருதுகள்

- ✓ 10 அறிஞர்களுக்கு செம்மொழி தமிழ் விருதுகள் வழங்கப்பட்டன.
- ✓ 2008ஆம் ஆண்டு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அமைக்கப்பட்ட பிறகு முன்னாள் முதல்வர் அவர்களால் அமைக்கப்பட்ட கலைஞர் மு. கருணாநிதி தமிழ் அறிவு அறக்கட்டளை மூலம் இந்த விருதுகள் வழங்கப்பட்டன.
- ✓ இந்த நிறுவனத்தின் புதிய வளாகம் அமைக்கப்படும், மேடவாக்கம்-சோழிங்கநல்லூர் இணைப்புச் சாலைக்கு ‘செம்மொழிச் சாலை’ என்று பெயரிடப்படும் என்றும், தென்கிழக்கு

ஆசியாவில் உள்ள ஐந்து பல்கலைக் கழகங்களில் செம்மொழி தமிழ் இருக்கை உருவாக்கப்படும் என்றும் திரு. ஸ்டாலின் கூறினார்.

- **கீழடி அகழ்வாராய்ச்சிக்குப் பின்னால் இருந்த கைகள்**
- ✓ சிவகங்கை மாவட்டம் கீழடியில் நடைபெற்ற தொல்லியல் ஆய்வுகள், வைகை பள்ளத்தாக்கு கி.மு. 6ஆம் நூற்றாண்டில் எப்படி இருந்தது என்பதை எடுத்துக்காட்டுவதாய் உள்ளன. இப்போது, ஒரு கலைஞர் அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டுள்ள ஆண்கள் மற்றும் பெண்களின் வாழ்க்கையையும் பணியையும் ஆவணப்படுத்தியுள்ளார்.
- ✓ தரமணியில் உள்ள ராஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் சென்னை புகைப்பட பையனலெ (Chennai Photo Biennale) பதிப்பு 3ன் ஒரு பகுதியாக, வி. சரண்ராஜின் புகைப்படங்கள். 'கீழடி' என்ற தலைப்பில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அகழ்வாராய்ச்சியில் இந்தத் தொழிலாளர்களின் பங்கு மற்றும் கலைப்பொருட்களைக் காட்சிப் படுத்துவதற்கு முன்னதாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை அவை வெளிப்படுத்துகின்றன.

- **உலக சமூக ஆஸ்கர் விருது (Global Community Oscar Award) 2021**
- ✓ சூர்யா, ஜோதிகா மற்றும் உதயநிதி ஆகியோர் உலகளாவிய சமூக ஆஸ்கார் விருதுகளுக்கான பட்டியலில் உள்ளனர்.
- ✓ இந்த விருதுகள் மனித சமூகங்களை வலுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்த மற்றும் சர்வதேச அளவில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்திய பிரபலங்களை அங்கீகரிக்கின்றன.

- **70 குடிமை உட்கட்டமைப்புத் திட்டங்கள் (Civic Infrastructure Projects)**
- ✓ நமக்கு நாமே திட்டத்தின்கீழ், சென்னை மாநகராட்சியின் 70 குடிமை உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு, மாநில அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. மேலும் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ நமக்கு நாமே திட்டம் என்ற ஒரு திட்டத்தை அரசு தொடங்கியுள்ளது. இதில் உங்கள் பங்களிப்பு 33 விழுக்காட்டிற்கு மேல் இருந்தால் இந்தத் திட்டங்களை நீங்கள் மேற்கொள்ளலாம்.
- ✓ உங்களிடம் 50 விழுக்காடு பங்களிப்பு இருந்தால், நன்கொடையாளர்களே திட்டத்தைச் செயல்படுத்த முடியும். உங்கள் பங்களிப்பு 33 விழுக்காட்டிற்கு மேல் 50 விழுக்காட்டிற்குக் கீழ் இருந்தால் ஒப்பந்தப்புள்ளி கோர வேண்டும். ஆனால் மீதமுள்ள தொகை அரசால் வழங்கப்படும்.

- **மாநிலத்தின் ஆறாவது புலிகள் காப்பகம்**
- ✓ தமிழக வனத்துறை - ஈரோடு வனக் கோட்டத்தில், மாநிலத்தின் ஆறாவது புலிகள் காப்பகத்தை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.
- ✓ 82,144 ஹெக்டேர் பரப்பளவுக்கு பரந்து விரிந்துள்ள ஈரோடு கோட்டத்தில், யானைகள், சிறுத்தைகள், காட்டு நாய்கள், காட்டுப்பன்றிகள், இந்திய மான்கள், மான்கள் மற்றும் இதர அரிய வகை உயிரினங்கள் மற்றும் 20 வகையான புலிகள் உள்ளன.
- ✓ ஓராண்டிற்கு முன்பாக, ஸ்ரீவில்லிப்புத்தூர் - மேகமலை புலிகள் காப்பகத்தை இந்தியாவின் 51 வது புலிகள் காப்பகமாகவும், தமிழ்நாட்டின் ஐந்தாவது காப்பகமாகவும் ஒன்றிய அரசு அங்கீகரித்தது.

- **2022ஆம் ஆண்டுக்கான பத்ம ஸ்ரீ விருதுகள் - தமிழ்நாடு**
- ✓ தமிழகத்தைச் சேர்ந்த ஏழு முக்கிய பிரமுகர்களுக்கு – கலை, சமூகப்பணி, மருத்துவம் ஆகிய துறைகளில் அவர்கள் ஆற்றிய சாதனைக்காக, 2022ஆம் ஆண்டிற்கான பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டுள்ளது.
- ✓ பத்மஸ்ரீ விருது பெற்ற 7 பேர் - இலக்கியம் மற்றும் கல்விக்காக சிற்பி பாலசுப்பிரமணியன், சமூகப் பணிக்காக எஸ் தாமோதரன், கலைத்துறைக்காக எஸ். பல்லேஷ் பஜேந்திரி, சௌகார் ஜானகி, ஆர். முத்துக் கண்ணம்மாள் மற்றும் ஏ.கே. சி. நடராஜன், மருத்துவத்திற்காக டாக்டர். வீராசாமி சேஷையா ஆகியோர் ஆவர்.

- **பொது நூலகங்கள் சட்டம்**
- ✓ பொது நூலகங்கள் சட்டம், விதிகள் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும்.
- ✓ பொது நூலகங்கள் எதிர்கொள்ளும் நிதிப் பற்றாக்குறை மற்றும் நூலகத் துறையின் வளர்ச்சிப் பணிகளில் ஏற்படும் பாதிப்புகளை உணர்ந்து, தமிழ்நாடு அரசு பொது நூலகச் சட்டம், 1948 மற்றும் பொது நூலக விதிகள், 1950 ஆகியவற்றை மறுபரிசீலனை செய்ய முடிவு செய்துள்ளது.

- **சோழர் கால கல்வெட்டுகள்**
- ✓ அவை முதலாம் குலோத்துங்கன், விக்ரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன் காலத்தைச் சேர்ந்தவை.
- ✓ விழுப்புரம் மாவட்டம் ஆங்கூரில் உள்ள விஷ்ணு கோவிலில் சோழர் கால கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- ✓ அவை முதலாம் குலோத்துங்கன் (1070-1120), விக்ரம சோழன் (1118-1135) மற்றும் இரண்டாம் குலோத்துங்கன் (1133-1150) காலத்தைச் சேர்ந்தவை ஆகும்.

- **தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனங்கள் கழக கண்காட்சி (T.N. Unmanned Aerial Vehicles Corpn. Expo)**
- ✓ இந்த நிறுவனம் ரூ.10 கோடி செலவில் நிறுவப்பட்டது.
- ✓ ரூ.10 கோடியில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனங்கள் கழக கண்காட்சியை சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் தொடங்கி வைத்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஆளில்லா விமானங்களின் தேவை அதிகரித்து வருவதாக செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

- **சமூ நீதிக்கான அகில இந்திய கூட்டமைப்பு**
- ✓ குடியரசு தினத்தையொட்டி, முதல்வர் மு.க. ஸ்டாலின், சமூக நீதிக்கான அகில இந்திய கூட்டமைப்பை விரைவில் தொடங்க உள்ளதாகவும், அதில் 'அனைத்து மாநிலங்களில் இருந்தும் ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தலைவர்கள்' இருப்பார்கள் என்றும் கூறினார்.
- ✓ 'சமூக நீதிக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது மற்றும் சமூக நீதி இயக்கத்திற்கான கூட்டு தேசிய திட்டம்' என்ற தலைப்பில் நடைபெற்ற தேசிய வலைத்தளத்தில் உரையாற்றிய திரு. ஸ்டாலின், 'சமூக நீதி தொடர்பான சட்டங்கள் குறித்து அனைத்து மாநிலங்களுக்கும் இந்தக் கூட்டமைப்பு ஆலோசனைகளை வழங்கும் என்றும் தெரிவித்தார்.

- **அறிஞர்களுக்கான விருதுகள்**
- ✓ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் புதன்கிழமை அன்று, தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பங்களித்த அறிஞர்கள், அமைப்புகள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கான 2021 ஆம் ஆண்டு விருதுகளை அறிவித்தார்.

- ✓ இந்த விருதுத் தொகையானது, இந்த ஆண்டு முதல் ரூ. 1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தப்படுவதாக அவர் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார். விருதுபெறுபவர்களுக்கு ஒரு சவரன் தங்கப் பதக்கம், சால்வை மற்றும் பாராட்டுப் பத்திரம் வழங்கி கௌரவிக்கப்படும்.
- ✓ பேரறிஞர் அண்ணா விருது நாஞ்சில் சம்பத்துக்கும், மகாகவி பாரதியார் விருது பாரதி கிருஷ்ணகுமாருக்கும் வழங்கப்படும்.
- ✓ பாவேந்தர் பாரதிதாசன் விருது செந்தலை கவுதமனுக்கும், சொல்லின் செல்வர் விருது சூர்யா சேவியருக்கும் வழங்கப்படும்.
- ✓ சிங்காரவேலர் விருதுக்கு மதுக்கூர் இராமலிங்கமும், தமிழ்த்தாய் விருதுக்கு மலேசிய தமிழ் எழுத்தாளர் சங்கமும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- ✓ இந்த அறிவிப்பின்படி, திருவள்ளுவர் விருது சஞ்சீவிராயருக்கும், சி.பா. ஆதித்தனார் விருது உயிர்மை இதழுக்கும் வழங்கப்படும்.
- ✓ பாரதி பாஸ்கருக்கு கம்பர் விருதும், ஜி.யு.போப் விருது மூத்த பத்திரிகையாளரும், தி இந்து பத்திரிகையின் முன்னாள் வாசகர்கள் ஆசிரியருமான ஏ.எஸ். பன்னீர் செல்வத்துக்கும் வழங்கப்படும்.
- ✓ மறைமலை அடிகளார் விருது சுகி சிவம் அவர்களுக்கும், இளங்கோ அடிகள் விருது நெல்லை கண்ணனுக்கும் வழங்கப்படும். ஞான அலோசியசுக்கு அயோத்திதாஸ் பண்டிதர் விருது வழங்கப்பட உள்ளது.

## ➢ புலிகள் காப்பகம் TX2 விருதை வென்றது

- ✓ 2010 ஆம் ஆண்டு முதல் புலிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கியதற்காக, தமிழ்நாட்டின் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்திற்கு சர்வதேச TX2 விருது வழங்கப்பட்டுள்ளது.
- ✓ இது ஈரோடு மாவட்டத்தில் அமைந்துள்ளது. இப்போது அதன் 1408 ச.கிமீ வளாகத்தில் 80 புலிகள் உள்ளன.
- ✓ காட்டுப் புலிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கியதற்காக, நேபாளத்தின் பார்டியா தேசிய பூங்காவிற்கும் இந்த விருது கூட்டாக வழங்கப்பட்டுள்ளது.

## ➢ தொலைத் தொடர்பு கட்டமைப்பு கொள்கை, 2022

- ✓ தமிழ்நாடு தொலைத் தொடர்பு கட்டமைப்புக் கொள்கை, 2022ஐ மாநில அரசு வகுத்துள்ளது. இது ஒரு வலுவான மற்றும் பாதுகாப்பான அதிநவீன தொலைத் தொடர்பு வலையமைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன்மூலம் விண்ணப்பம் அனுப்புதல், ஒப்புதல் மற்றும் தொலைத் தொடர்பு கட்டமைப்பின் நிறுவல் செயல்முறை எளிதாவதன்மூலம் தடையற்ற கவரேஜ் கிடைக்க ஏதுவாகிறது.

## ➢ நியாய விலைக் கடைகளில் சிறு தானியங்கள் விற்பனை செய்யப்படும்

- ✓ சென்னை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு குடிமைப் பொருள் கழகம் மூலம் நடத்தப்படும் நியாய விலைக் கடைகள் மூலம் சிறுதானியங்களை சோதனை அடிப்படையில் விற்பனை செய்ய மாநில அரசு ஆணை பிறப்பித்துள்ளது.
- ✓ சிறு தானியங்களை பதப்படுத்துவதற்கும் மதிப்பு கூட்டுறவதற்கும் விலை நிர்ணயம் செய்வதற்கும் மாநில அளவிலான குழுவை மாநில அரசு அமைத்துள்ளது. இந்தக் குழுவின் தலைவராக கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் இருப்பார் என ஜனவரி 25ஆம் தேதி வெளியிடப்பட்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- **2030ஆம் ஆண்டுக்குள் 46 இலட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.**
  - ✓ விருதுநகர், இராமநாதபுரம், தூத்துக்குடி, சிவகங்கை, தேனி, கன்னியாகுமரி, புதுக்கோட்டை, திண்டுக்கல், திருநெல்வேலி ஆகிய இடங்களில் புதிய தொழிற் பூங்காக்களை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவற்றில் ஆறு மாவட்டங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.
  - ✓ தொழில்துறை வளாகங்கள் மற்றும் மேம்பாட்டு மையங்களை அமைப்பதற்காக, சிப்காட் 50 விழுக்காடு மானியத்துடன் நிலத்தை ஒதுக்கும். அத்துடன் முத்திரை வரியில் இருந்து 100 விழுக்காடு விலக்கும் அளிக்கும்.

- **மூத்த குடிமக்களுக்கான வரைவுக் கொள்கை**
  - ✓ மாநிலத்தின் தற்போதைய மக்கள் தொகை மாற்றத்தை அங்கீகரிக்கும் வகையில், மூத்த குடிமக்களுக்கான வரைவுக் கொள்கையை தமிழ்நாடு அரசு வகுத்துள்ளது.
  - ✓ மூத்த குடிமக்கள் நலனுக்காக தனியாக ஒரு இயக்குநரகமும் திட்டமிடப்பட்டுள்ளது.
  - ✓ வரைவு ஆவணம் அரசியலமைப்பின் 41வது பிரிவை அடிப்படையாகக் கொண்டது. இது வேலையின்மை, முதுமை, நோய் மற்றும் இயலாமை போன்ற காரணங்களின் அடிப்படையில், வேலை, கல்வி மற்றும் பொது உரிமையைப் பெற்றுத்தருவதற்கு மாநில அரசுக்குத் தேவைப்படுகிறது.
  - ✓ தமிழ்நாட்டில் கடந்த ஆண்டில் 13.6 விழுக்காடு மூத்த குடிமக்கள் இருந்தனர். இந்த எண்ணிக்கை 2031ஆம் ஆண்டில் 18.2 விழுக்காட்டு உடன், 60 வயது மற்றும் அதற்கும் மேற்பட்ட வயதுடையவர்களின் எண்ணிக்கையில் (கேரளாவிற்குப் பிறகு) இரண்டாவது அதிக விகிதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

- **கட்டுமானத் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித் திட்டம்**
  - ✓ கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதித் திட்டத்தைத் தொடங்க மாநில அரசு முடிவு செய்துள்ளது. இதன்கீழ் பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.4 இலட்சம் உதவித் தொகை வழங்கப்படும்.
  - ✓ இந்தத் திட்டத்தின்கீழ் இரண்டு கூறுகள் உள்ளன. அவற்றில் ஒன்று பயனாளிகள் தலைமையிலான பங்களிப்பு ஆகும். மற்றொன்று நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் குடியிருப்புகளை வாங்குவது ஆகும்.
  - ✓ பயனாளர் மற்ற கூறைத் தேர்வு செய்தால், பிரதமரின் வீட்டு வசதித் திட்டம் (நகர்ப்புறம்) இல் உள்ள விதிமுறைகளின்படி அதிகபட்சமாக ரூ.4 இலட்சம் உதவி வழங்கப்படும்.

- **பிரதமர் இளநீர் வியாபாரியைப் பாராட்டினார்**
  - ✓ திருப்பூர் மாவட்டம் உடுமலைப் பேட்டையில் இளநீர் வியாபாரியாக உள்ள மு. தாயம்மாள் (43) என்பவர் தனது பகுதியில் உள்ள அரசுப் பள்ளிக்கு ரூ.1 லட்சம் நன்கொடை வழங்கியதற்காக, பிரதமர் நரேந்திர மோடி அவரை ஞாயிற்றுக் கிழமை அன்று பாராட்டினார். நாட்டு மக்களுக்கான தனது மாதாந்திர வானொலி உரையில் பிரதமர் நரேந்திர மோடி, சின்ன வீரம்பட்டியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு நிதி தேவைப்படுவதை திருமதி தாயம்மாள் எவ்வாறு தெரிந்து கொண்டார் என்பதை விளக்கினார். திருமதி. தாயம்மாள் தனது சேமிப்பில் இருந்து ரூ. 1 இலட்சத்தை வழங்கினார்.

# மாநிலங்கள்

- **கொச்சி நீர் மெட்ரோ திட்டம்**
- ✓ முதலாவது நீர் மெட்ரோ படகு திட்டம், கொச்சி மேட்ரோ ரயில் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.
- ✓ 747 கோடி கொச்சி நீர் மெட்ரோ திட்டத்தின், முழுவதும் குளிரூட்டப்பட்ட, பேட்டரி மூலம் இயங்கும் 23 மின்சார படகுகளில் முதலாவது படகு, கொச்சி ஷிப்யார்ட் லிமிடெட் ஆல், வெள்ளிக் கிழமை காலை கொச்சி மெட்ரோ ரயில் லிட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

- **மேஜர் தியான் சந்த் விளையாட்டுப் பல்கலைக் கழகம்**
- ✓ உத்தரப் பிரதேசத்தின் மீரட்டில் மேஜர் தியான் சந்த் விளையாட்டு பல்கலைக் கழகத்திற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார். இது உத்தரப் பிரதேசத்தின் முதல் விளையாட்டுப் பல்கலைக் கழகமாகவும் இருக்கும்.

- **நல் ஆளுகைக் குறியீடு (Good Governance Index)**
- ✓ மாவட்ட அளவில் நல் ஆளுகைக் குறியீட்டைக் கொண்ட நாட்டின் முதலாவது யூனியன் பிரதேசமாக ஜம்மு காஷ்மீர் விரைவில் மாற உள்ளது.
- ✓ மாவட்ட அளவில் உள்ள நல் ஆளுகைக் குறியீடு, ஜம்மு காஷ்மீரின் 20 மாவட்டங்கள் ஒவ்வொன்றும், நாட்டின் சிறந்த நிர்வாகத்தில் உள்ள மாவட்டங்களின் நிலைக்கு உயர்வதற்கு வழி ஏற்படுத்திக் கொடுக்கும்.

- **திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத மாவட்டங்கள்**
- ✓ டிசம்பர் 31, 2021 வரை தூய்மை இந்தியா (கிராமப்புறம்) திட்டம் கட்டம்-2 திட்டத்தின்கீழ் அதிக எண்ணிக்கையிலான திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத கிராமங்களின் பட்டியலில் தெலுங்கானா நாட்டிலேயே முதலாவது இடத்தில் உள்ளது.
- ✓ இதைத் தொடர்ந்து 4,432 கிராமங்களைக் கொண்ட தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

- **முதலாவது எல்பிஜி மூலம் இயக்கப்படும் புகை இல்லாத மாநிலம்**
- ✓ இந்திய மாநிலங்களிலேயே, இமாசலப் பிரதேசம் திரவ பெட்ரோலிய எரிவாயு மூலம் இயக்கப்படும் முதலாவது புகை இல்லாத மாநிலமாக ஆகியுள்ளது.
- ✓ இந்த வெற்றிக்குக் காரணம் ஒன்றிய அரசின் பிரதம மந்திரி உஜ்வாலா யோஜனா திட்டம் (Pradhan Mantri Ujjwala Yojana) மற்றும் இமாசலப் பிரதேச அரசின் முதலமைச்சரின் இல்லத்தரசி சுவிதா யோஜனா திட்டம் (Mukhya Mantri Grihini Suvidha Yojana) ஆகிய திட்டங்களின் செயலாக்கமே ஆகும்.

- **சைனிக் பள்ளிக்கு ஜெனரல் பிபின் ராவத் பெயர் வைக்கப்பட்டது**
- ✓ 2021 டிசம்பரில் ஹெலிகாப்டர் விபத்தில் இறந்த முப்படைகளின் தலைமைத் தளபதி பிபின் ராவத்தின் நினைவாக, மைன்புரியில் உள்ள சைனிக் பள்ளிக்கு அவரது பெயரை வைப்பதென்று உத்தரப் பிரதேச அரசு முடிவு செய்துள்ளது.
- ✓ சைனிக் பள்ளி என்ற பெயரை ஜெனரல் பிபின் ராவத் சைனிக் பள்ளி என்று பெயர் மாற்றம் செய்வது என்று உத்தரப் பிரதேச முதலமைச்சர் முடிவு செய்தார்.

- **இந்தியாவின் முதல் காகிதமில்லாத நீதிமன்றம்**
  - ✓ கேரள உயர்நீதி மன்றம், நாட்டின் முதல் காகிதமில்லாத நீதிமன்றமாக மாறத் தயாராக உள்ளது.
  - ✓ உச்ச நீதிமன்றத்தின் நீதிபதி டிஒய் சந்திரசூட், 2022 ஜனவரி 1 அன்று ஸ்மார்ட் நீதிமன்ற அறைகளைத் திறந்து வைத்தார்.

- **இந்தியாவின் முதலாவது திறந்த நிலை பாறை அருங்காட்சியகம்**
  - ✓ இந்தியாவின் முதலாவது தனித்துவமான ‘பாறை’ அருங்காட்சியகத்தை, ஐதராபாத்தில் மத்திய இணை அமைச்சர் டாக்டர். ஜிதேந்திர சிங் திறந்து வைத்தார்.
  - ✓ ஐதராபாத்தில் உள்ள இந்த திறந்த நிலை பாறை அருங்காட்சியகம், அதிகம் அறியப்படாத பல உண்மைகளைப் பற்றி மக்களுக்கு கற்பித்தல் மற்றும் அறிவூட்டுதல் என்ற நோக்கத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
  - ✓ பூமியின் வரலாற்றில் பாறைகளின் வயது 3.3 பில்லியன் ஆண்டுகள் முதல் 55 மில்லியன் ஆண்டுகள் வரை இருக்கும்.

- **இந்தியாவின் சானிட்டரி நாப்கின் இல்லாத முதல் ஊராட்சி**
  - ✓ கேரளாவின் குளம்பலங்கி கிராம ஊராட்சி - இந்தியாவின் சானிட்டரி நாப்கின் இல்லாத முதல் ஊராட்சியாக ஆகியுள்ளது.
  - ✓ இதை மாநில ஆளுநர் ஆரிப் முகமது கான், ஜனவரி 13 அன்று அறிவித்தார்.
  - ✓ பிரதமரின் சன்சத் ஆதர்ஷ் கிராம் யோஜனா (Prime Minister's Sansad Adarsh Gram Yojana) திட்டத்தின்கீழ், இந்தச் சுற்றுச் சூழல் நட்பு மாற்றத்தை நோக்கி இந்த ஊராட்சி நகர்கிறது.

- **உணவு பாதுகாப்பு**
  - ✓ ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டமும், ஒடிசா அரசும் கூட்டு சேர்ந்துள்ளன.
  - ✓ பருவநிலை மாற்றத்தை எதிர்க்கும் திறனை வலுப்படுத்துவதன்மூலம் சிறு மற்றும் குறு விவசாயிகளின் உணவுப் பாதுகாப்பை அவை மேம்படுத்தும்.

- **புகையில்லா மாநிலம்**
  - ✓ இமாசலப் பிரதேசம் இந்தியாவின் முதல் ‘புகை இல்லாத மாநிலம்’ ஆகியது.
  - ✓ உஜ்வாலா திட்டம், இமாச்சல் இல்லத்தரசி சுவிதா திட்டம் போன்ற பல நலத்திட்டங்களின் உதவியுடன் இந்த மாநிலம் இந்த சாதனையை எட்டியுள்ளது.
  - ✓ மேலும், நாட்டிலேயே 100 விழுக்காடு திரவ பெட்ரோலி எரிவாயு இயக்க முதல் மாநிலமாகவும் இமாசலப் பிரதேசம் மாறியுள்ளது.

- **தடுப்பூசி மைல் கல்**
  - ✓ ஜனவரி 23 அன்று, கர்நாடகா அரசு கோவிட்-19க்கு எதிராக தகுதியான அனைவருக்கும் 100 விழுக்காடு முதல் டோஸ் தடுப்பூசியைப் போட்டு ஒரு மைல்கல் சாதனையை நிகழ்த்தியுள்ளது.
  - ✓ நான்கு கோடிக்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்டு, நாட்டிலேயே இந்த சாதனையை நிகழ்த்திய முதல் மாநிலம் கர்நாடகா ஆகும்.
  - ✓ தகுதியான அனைத்து பயனாளிகளுக்கும் குறைந்தது ஒரு டோஸ் தடுப்பூசியாவது போட்ட நாட்டின் முதல் மாநிலம் இமாச்சலப் பிரதேசம் ஆகும்.

## ➢ AVGC உயர் சிறப்பு மையம் (Center of Excellence)

- ✓ இந்தியாவின் முதல் ஏவிஜிசி உயர் சிறப்பு மையத்தை (அனிமேஷன், விஷுவல் எஃபெக்ட்ஸ், கேமிங் மற்றும் காமிக்ஸ்) கர்நாடக அரசு, கர்நாடகாவின் பெங்களூரு மகாதேவபுராவில் தொடங்கியுள்ளது.
- ✓ இதற்கு மின்னணுவியல் தகவல் தொழில்நுட்பத் துறை உயிர் தொழில்நுட்பம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை நிதியுதவியை அளிக்கிறது.
- ✓ இத்தகைய ஒரு ஏவிஜிசி உயர் சிறப்பு மையத்தை நிறுவிய இந்தியாவின் முதல் மாநிலமாக கர்நாடகா ஆகியுள்ளது. இது ஆசியாவிலேயே மிகப்பெரிய மையமாகவும் உள்ளது.

## ➢ கிராபீன் கண்டுபிடிப்பு மையம் (Graphene Innovation Centre)

- ✓ நாட்டின் முதலாவது கிராபீன் கண்டுபிடிப்பு மையத்தை கேரளா மாநிலம் பெற உள்ளது.
- ✓ கேரளாவில் டிஜிட்டல் பல்கலைக் கழகம், சிஎம்இடி (CMET) திருச்சூருடன் இணைந்து கிராபீனுக்கான இந்திய கண்டுபிடிப்பு மையத்தை அமைக்க உள்ளது.
- ✓ கிராபீன் என்பது உலகில் இதுவரை கண்டறியப்பட்டவற்றில் மிகவும் மெல்லிய மற்றும் வலிமையான பொருள் ஆகும். இது நல்ல இரசாயண நிலைத்தன்மையைக் கொண்டுள்ளது.

## ➢ மூளை சுகாதார முன் முயற்சி (Brain Health Initiative)

- ✓ கர்நாடக மாநிலத்தில் நித்தி ஆயோக் உடன் இணைந்து NIMHANS (தேசிய மன நலம் மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனம்) மேற்கொண்ட ‘மூளை சுகாதார முன் முயற்சியை கர்நாடக அரசு தொடங்கி வைத்துள்ளது.
- ✓ இந்த வகையில் நாட்டிலேயே இது முதலாவது ஆகும்.
- ✓ இந்தத் திட்டத்தின்படி, மனநலம் பாதிக்கப்பட்டவர்களைப் பரிசோதித்து சிகிச்சை அளிப்பதில் மருத்துவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

# தேசிய செய்திகள்

- **பிரதமரின் கிசான் சம்மான் நிதி (Pradhan Mantri Kisan Samman Nidhi) திட்டம்**
  - ✓ பிரதமர் நரேந்திர மோடி – பிரதமரின் கிசான் சம்மான் நிதி திட்டத்தின்கீழ் 10வது தவணை நிதிப் பலனை ஜனவரி 1, 2022 அன்று வெளியிட்டார்.
  - ✓ முற்றிலும் இந்திய அரசால் நிதியளிக்கப்படும் இந்தத் திட்டம், ஏழை மற்றும் விளிம்பு நிலை விவசாயிகளுக்கு நிதியுதவி வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- **பாதே பாரத் (Padhe Bharat)**
  - ✓ ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் - ஜனவரி 1, 2022 அன்று ‘பாதே பாரத்’ என்ற 100 நாள் வாசிப்புப் பிரச்சாரத்தைத் தொடங்கி வைத்தார்.
  - ✓ வாசிப்புப் பிரச்சாரத்தின் தொடக்கமானது தேசிய கல்விக் கொள்கை 2020 உடன் இணைந்துள்ளது. இது குழந்தைகளுக்கான மகிழ்ச்சியான வாசிப்புக் கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

- **கல்பனா சாவ்லா விண்வெளி அறிவில் ஆராய்ச்சி மையம்**
  - ✓ பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், ஜனவரி 3, 2022 அன்று, சண்டிகர் பல்கலைக் கழகத்தில் விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சிக்கான கல்பனா சாவ்லா மையத்தைத் திறந்து வைத்தார்.

- **25வது தேசிய இளைஞர் திருவிழா**
  - ✓ பிரதமர் நரேந்திர மோடி – 25வது தேசிய இளைஞர் திருவிழாவை நடத்துவதற்கு புதுச்சேரியைத் தேர்வு செய்துள்ளார்.
  - ✓ பிரதமர் விழாவைத் தொடங்கி வைத்து இளைஞர்கள் மத்தியில் உரையாற்றுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
  - ✓ இந்தத் திருவிழாவானது ஜனவரி 12 முதல் 16, 2022 வரை, ‘திறமையான இளைஞர், வலிமையான இளைஞர்’ என்று பொருள்படும் ‘Shaksham Yuva Shashakth Yuva’ என்ற கருப்பொருளின்கீழ் நடைபெறும்.

- **ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு**
  - ✓ உணவு பதப்படுத்தும் தொழில்துறை அமைச்சர் பசுபதி “குமார் பராஸ், ‘ஒரு மாவட்டம் - ஒரு தயாரிப்பு’ அணுகுமுறையின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்ட ஆறு பிராண்டுகளை அறிமுகப்படுத்தினார்.
  - ✓ அவை 5 ஜனவரி 2022 அன்று புது தில்லியில் பிரதமரின் முறைப்படுத்தப்பட்ட மைக்ரோ உணவு பதப்படுத்தும் நிறுவனங்களின் திட்டத்தின்கீழ் (Pradhan Mantri Formalisation of Micro food processing Enterprises Scheme) தொடங்கப்பட்டன.

- **அக்ஷய பாத்ரா அறக்கட்டளை**
  - ✓ இந்தியாவில் உள்ள அக்ஷய பாத்ரா அறக்கட்டளை மற்றும் ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் ஆகியவை பிரதமரின் போஷன் சக்தி நிர்மானின் (முன்னதாக மதிய உணவுத் திட்டம் என்று பெயரிடப்பட்டிருந்தது) செயல்திறனை மேம்படுத்துவதற்காக ஒரு கூட்டாண்மைக்குள் நுழைந்துள்ளன.
  - ✓ உலக அளவில் மிகப்பெரிய பள்ளி உணவுத் திட்டத்தைச் செயல்படுத்திய, உலக உணவுத் திட்டத்துடன் இணைந்து 2020இல் ஒரு ஒருங்கிணைப்பு அமைப்பாகத்

தொடங்கப்பட்ட பள்ளி உணவுக் கூட்டணிக்கு இந்தியா மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்ததாகத் திகழ்கிறது.

- பசுமை ஆற்றல் வழித்தடம் கட்டம் 2 (**Green Energy Corridor Phase 2)**
- ✓ பசுமை ஆற்றல் வழித்தடத்தின் இரண்டாம் கட்டத்திற்கு ரூ.12,000 கோடியை ஒதுக்கீடு செய்து, ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- ✓ இந்தத் திட்டத்தின் இரண்டாம் கட்டமானது 2030ஆம் ஆண்டுக்குள் 450 ஜிகா வாட் நிறுவப்பட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனை அடையும் இலக்கை அடைய உதவும்.

- **தடுப்பூசித் திட்டம்**
- ✓ ஜனவரி 7 அன்று இந்தியா – அதன் தடுப்பூசித் திட்டத்தின்கீழ் அதன் குடிமக்களுக்கு 150 கோடி தடுப்பூசி டோஸ்களை வழங்கிய வரலாற்று மைல் கல்லை எட்டியுள்ளது.
- ✓ சுகாதார அமைச்சகத்தின் கூற்றுப்படி, வயது வந்தோரில் 91 விழுக்காட்டிற்கும் அதிகமானோர் குறைந்தபட்சம் ஒரு டோஸ் பெற்றுள்ளனர். அதே சமயம் 66 விழுக்காட்டிற்கும் அதிகமானோர் முழுமையாக தடுப்பூசி பெற்றுள்ளனர்.

- **தேசிய நீர் விருதுகள் - 2020**
- ✓ தேசிய நீர் விருதுகள் - 2020இல் 'சிறந்த மாநிலங்கள் பிரிவில்' உத்தரப் பிரதேசம் முதலிடம் பிடித்துள்ளது.
- ✓ 3வது தேசிய நீர் விருதுகள் - 2020, ஜனவரி 7, 2022 அன்று ஒன்றிய ஜல்சக்தி அமைச்சர் கஜேந்திர சிங்-ஆல் அவர்களால் அறிவிக்கப்பட்டது.
- ✓ 'சிறந்த மாநிலங்கள் பிரிவில்' உத்தரப் பிரதேசம் முதலிடத்தையும், இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களை ராஜஸ்தான் மற்றும் தமிழ்நாடும் பெற்றுள்ளன.

- **இந்தியாவில் சிறுத்தை அறிமுகம்**
- ✓ இந்தியாவில் சிறுத்தையை தத்தெடுப்பதற்கான செயல் திட்டத்தை ஒன்றிய அரசு ஜனவரி 5 அன்று அறிவித்தது.
- ✓ தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் 19வது கூட்டத்தின்போது, சுற்றுச் சூழல் அமைச்சகம், 'இந்தியாவில் சிறுத்தையைத் தத்தெடுப்பதற்கான செயல் திட்டத்தை' வெளியிட்டது.
- ✓ இந்தியாவில், இந்த செயல் திட்டத்தின் ஒரு பகுதியாக அடுத்த ஐந்து ஆண்டுகளில் 50 சிறுத்தைகள் அறிமுகப்படுத்தப்படும்.

- **வீர் பால் திவாஸ் (Veer Bal Diwas)**
- ✓ ஜனவரி 9 அன்று, பிரதமர் நரேந்திர மோடி – குரு கோவிந்த் சிங்கின் மகன்களின் நினைவாக டிசம்பர் 26ஆம் தேதியை 'வீர் பால் தினம்' ஆகக் கடைபிடிக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள முடிவை அறிவித்தார்.

- **தூய்மையான நடுத்தர நகரம்**
- ✓ நொய்டா, தூய்மை கணக்கெடுப்பு 2021இல் தூய்மையான நடுத்தர நகரம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது.
- ✓ இது இந்தியாவில் மேற்கொள்ளப்படும் சுகாதாரம், தூய்மை மற்றும் சுகாதாரம் பற்றிய வருடாந்திர கணக்கெடுப்பாகும்.

- ➢ **குடியரசு தின விழா கொண்டாட்டங்கள்**
- ✓ நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் பிறந்த நாளை உள்ளடக்கி, ஒவ்வொரு ஆண்டும் 24ஆம் தேதிக்குப் பதிலாக ஜனவரி 23 முதல் தொடங்கும்.
- ✓ இந்தியாவின் வரலாறு மற்றும் கலாச்சாரத்தின் முக்கிய அம்சங்களை நினைவுகூறும் வகையில், அரசு கவனம் செலுத்துவதற்காக, இந்த ஒரு நாள் சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- ✓ கடந்த ஆண்டு, நேதாஜியின் பிறந்த நாளான ஜனவரி 23ஆம் தேதியை 'பராக்கிரம தினம்' (parakram Diwas) ஆகக் கொண்டாட ஒன்றிய அரசு முடிவு செய்தது.

- ➢ **உலகின் மிகப்பெரிய காதி தேசியக் கொடி**
- ✓ ஜனவரி15, 2022 அன்று, 'இராணுவ தினத்தைக்' கொண்டாடுவதற்காக காதி துணியால் செய்யப்பட்ட உலகின் மிகப்பெரிய தேசியக் கொடி காட்சிக்கு வைக்கப்பட்டது.
- ✓ இது ஜெய்சல்மாரில் உள்ள இந்தியா – பாகிஸ்தான் எல்லையில் உள்ள லோங்கேவாலாவில் காட்சிப்படுத்தப்பட்டது. 1971ஆம் ஆண்டு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான வரலாற்றுப் போரின் மையக் கட்டமாக லோங்கேவாலா இருந்தது.

- ➢ **தேசிய தொழில்நுட்ப ஜவுளி இயக்கம் (National Technical Textiles Mission)**
- ✓ தேசிய தொழில்நுட்ப ஜவுளி இயக்கத்தின்கீழ் 20 திட்டங்களுக்கு ஒன்றிய அரசு அனுமதியளித்துள்ளது.
- ✓ ஜவுளித்துறை அமைச்சகம் சிறப்பு இழைகள் மற்றும் ஜியோடெக்ஸ்டைல்களில் 30 கோடி மதிப்பிலான 20 மூலோபாய ஆராய்ச்சித் திட்டங்களுக்கு அனுமதி அளித்துள்ளது.
- ✓ இந்த மூலோபாய ஆராய்ச்சித் திட்டங்கள் ஒன்றிய அரசின் முன்னோடித் திட்டமான 'தேசிய தொழில்நுட்ப ஜவுளி இயக்கத்தின்'கீழ் வருகின்றன.

- ➢ **காலர்வாலி புலி (Collarwali Tigress)**
- ✓ 'காலர்வாலி' என்று பிரபலமாக அழைக்கப்படும் இந்தியாவின் 'சூப்பர்மாம்' புலி, மத்தியப் பிரதேசத்தில் உள்ள பெஞ்ச் புலிகள் காப்பகத்தில் (Pench Tiger Reserve) வயது முதிர்வு காரணமாக உயிரிழந்தது.
- ✓ 'காலர்வாலி' புலி தனது வாழ்நாளில் 29 குட்டிகளைப் பெற்றெடுத்ததாக அறியப்பட்டது. இது உலக சாதனையாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.
- ✓ 2008இல் பூங்காவில் ரேடியோ காலர் பொருத்தப்பட்ட முதல் புலி என்ற பெருமையை இது பெற்றதால், இது 'காலர்வாலி' என்ற பட்டத்தைப் பெற்றது.

- ➢ **ச∴பாய் கரம்சாரிகளுக்கான தேசிய ஆணையம் (National Commission For Safai Karamcharis)**
- ✓ 31.03.2022க்குப் பிறகு மூன்று ஆண்டுகளுக்கு ச∴பாய் கரம்சாரிகளுக்கான தேசிய ஆணையத்தின் பதவிக் காலத்தை நீட்டிக்க ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ✓ மூன்றாண்டு நீட்டிப்பின் மொத்தத் தாக்கம் தோராயமாக ரூ.43.68 கோடியாக இருக்கும்.
- ✓ 31.03.2022க்கு அப்பால் இன்னும் 3 ஆண்டுகளுக்கு ச∴பாய் கரம்சாரிகளுக்கான தேசிய ஆணையத்தின் முக்கிய பயனாளிகளாக, ச∴பாய் கரம்சாரிகள் மற்றும் அடையாளம் காணப்பட்ட கையால் துப்புரவு செய்பவர்கள் இருப்பார்கள். 31.12.2021 அன்று எம்எஸ் சட்ட சர்வேயின்கீழ் அடையாளம் காணப்பட்ட கையால் சுத்தம் செய்பவர்களின் எண்ணிக்கை 58098 ஆகும்.

- **நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்**

✓ நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் 125 ஆவது பிறந்த நாளான ஜனவரி 23ஆம் தேதி இந்தியா கேட்டில் அவரது ஹாலோகிராம் சிலையைத் திறந்து வைப்பதாக ஜனவரி 21ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்.

✓ அன்றைய தினம், பேரிடர் மேலாண்மைத் துறையில் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் வழங்கப்படும் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அபதா பிரபந்தன் விருது வென்றவர்களைக் கவுரவிக்கும் சிறப்பு நிகழ்ச்சி நடைபெறும்.

- **புலிகள் காப்பக நிலை**

✓ மூன்று புதிய தளங்களுக்கு புலிகள் காப்பக அந்தஸ்து வழங்குவதற்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அத்துடன் மேலும் இரண்டு இடங்களுக்கு அனுமதி வழங்க கொள்கையளவில் ஒப்புக் கொண்டுள்ளது.

✓ இந்த ஐந்து புதிய தளங்களும் இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தியாவில் புலிகள் காப்பகங்களாக முறையாக அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம் மொத்த புலிகள் காப்பகங்களின் எண்ணிக்கை 56 ஆக இருக்கும்.

✓ விளாடிவோஸ்டோக்கில் நடைபெறவுள்ள உலகளாவிய புலிகள் உச்சி மாநாட்டிற்கு முன்பாக, இந்த 5 புதிய தளங்களும் முறையாக அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றன.

✓ தமிழ்நாட்டில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலைதான் கடைசியாக (51வது) புலிகள் காப்பகமாக 2021ல் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

- **ஊரகப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல் (Rural Area Development Plan Formulation and Implementation)**

✓ ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் கிரிராஜ் சிங் - ஜனவரி 20, 2022 அன்று பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தால் தயாரிக்கப்பட்ட திருத்தப்பட்ட ஊரகப் பகுதி மேம்பாட்டுத் திட்ட உருவாக்கம் மற்றும் செயலாக்கத்தின் வழிகாட்டுதல்களை வெளியிட்டார்.

✓ ஊரகப்பகுதி மேம்பாட்டுத் திட்ட உருவாக்கம் மற்றும் செயலாக்க வழிகாட்டுதல்களின் வெளியீடு, பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தின் ஸ்வாமித்வா (SVAMITVA) திட்டம் மற்றும் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் ரர்பன் (RURBAN) இயக்கம் போன்ற ஒன்றிய அரசின் முயற்சிகளுக்குத் துணை புரியம் மற்றும் புவி சார் தகவல்களை சிறப்பாகப் பயன்படுத்த உதவும்.

- **பனாரஸ் இந்து பல்கலைக் கழகம்**

✓ பனாரஸ் இந்து பல்கலைக் கழகம் - தன்னுடைய வழக்கமான பாடத்திட்டத்தில் ‘இந்து தர்மத்தை’ அறிமுகப்படுத்திய நாட்டின் முதலாவது பல்கலைக் கழகமாகத் திகழ்கிறது.

✓ புதிய கல்விக் கொள்கை 2020ன்படி, ஒரு இடைநிலைத் திட்டமான இந்து ஆய்வுகளில் இரண்டு வருட முதுகலைப் படிப்பை இந்தப் பல்கலைக் கழகம் தொடங்கியுள்ளது.

✓ நாட்டில் எந்த ஒரு பல்கலைக் கழகமும் இதுவரை வழங்காத முதல் பாடநெறி இதுவாகும்.

- **பராக்கிரம தினம் (Parakram Diwas)**

✓ 23 ஜனவரி 2022, சுதந்திரப் போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் 125வது பிறந்த நாள் ஆகும்.

✓ .இந் நாள் 2022 ஆண்டு முதல் ‘பராக்ரம் தினம்’ என்றும் கொண்டாடப்படும்.

- **வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம்**
- ✓ வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் - ஆன்லைன் நிகழ்வில் Cycles4Change சவால் மற்றும் Streets for people Challenge இன் சீசன் 2 ஆகியவற்றை அறிமுகப்படுத்தியது.
- ✓ 'Streets for people Challenge' இன்கீழ், 38 இடங்கள் பாதசாரிகளுக்கு முன்னுரிமை அளிப்பதன்மூலம், முக்கியமான தெருக்கள் ஒவ்வொன்றையும் புதுமைப்படுத்தின.
- ✓ பொது இடங்களை மக்களுக்கு ஏற்றதாக மாற்றுவதற்காக, The Smart Cities Mission 2020ஆம் ஆண்டு முதல் நகரங்களுக்கு இடையேயான சவால்களை ஏற்பாடு செய்து வருகிறது.
- ✓ இந்த சவால்கள், '2006 தேசிய நகர்ப்புற போக்குவரத்துக் கொள்கைக்கு' ஏற்ப ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

- **Abide With Me Hymn**
- ✓ குடியரசு தின ஊர்வலத்தின்போது பாரம்பரியமாகப் பாடப்படும் 'அபைட் வித் மீ' என்ற பாடலுக்கு பதிலாக கவி பிரதீப் எழுதிய ' ஏ மேரே வதன் கே லோகன்' என்ற பாடல் மாற்றி பாடப்படுகிறது.
- ✓ இந்தப் பாடல் இந்தியா – சீனா போரின்போது கவி பிரதீப் என்பவரால் எழுதப்பட்டது. இது முதன் முதலில் லதா மங்கேஷ்கரால் 27 ஜனவரி 1963இல் பாடப்பட்டது. இதற்கு சி. ராமச்சந்திரா இசையமைத்தார்.

- **குடியரசு தின விழா கொண்டாட்டங்கள்**
- ✓ ராஜ்பாத்தில் நடைபெற்ற ஃப்ளைபாஸ்ட் மற்றும் ஸ்டேட் டேப்லாக்ஸ் ஆகியவை இந்த ஆண்டு கொண்டாட்டங்களாக விளங்கின.
- ✓ முதல் பெண் ரஃபேல் போர் விமான பைலட் ஷிவாங்கி சிங் இந்திய விமானப் படை வருகையில் ஒரு பகுதியாக இருந்தார்.

- **ட்ரோன் சான்றிதழ் திட்டம்**
- ✓ ஜனவரி 26 அன்று, சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் - ட்ரோன்களுக்கு சான்றிதழ் வழங்குவதை எளிமையாகவும், வேகமாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் செய்வதற்காக ட்ரோன் சான்றிதழ் வழங்கும் திட்டத்தை அறிவித்தது.
- ✓ தாராளமயமாக்கப்பட்ட ட்ரோன் விதிகள், 20201இன் விதி 7இனகீழ் ட்ரோன் சான்றிதழ் திட்டம் அறிவிக்கப்பட்டது.
- ✓ 2030க்குள் இந்தியாவை ' உலகின் ட்ரோன் மையமாக' மாற்றுவதற்கான ஒன்றிய அரசின் முயற்சிக்கு ஏற்ப இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- **6% குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பு தொழில்முனைவோருக்குச் சொந்தமாக உள்ளன**
- ✓ மகாராஷ்டிராவில் 96,805 நிறுவனங்கள் தாழ்த்தப்பட்ட தொழில்முனைவோருக்குச் சொந்தமாக உள்ளதால், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தொழில்முனைவோருக்குச் சொந்தமான குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையில் இந்தியாவில் மகாராஷ்டிரா முதலிடத்தில் உள்ளது.
- ✓ தேசிய அளவில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கையில் பட்டியல் வகுப்பு தொழில்முனைவோருக்குச் சொந்தமான நிறுவனங்களின் விகிதம் 6 விழுக்காடு ஆகும்.

- **சிறந்த கிராமங்கள்**
- ✓ இந்தியா 150 கிராமங்களை சிறந்த கிராமங்களாக மாற்றுகிறது.
- ✓ இஸ்ரேல் அரசின் தொழில்நுட்ப உதவியுடன் 12 மாநிலங்களில் உள்ள 150 கிராமங்களை 'சிறந்த கிராமங்களாக' மாற்ற ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளது.

- **மசாலா பொருட்கள் பரிமாற்ற போர்ட்டல் (Spice Exchange Portal)**

இந்திய மசாலா பொருட்கள் பரிமாற்ற போர்ட்டல் - சமீபத்தில் ஸ்பைஸ் எக்சேஞ் போர்ட்டலை அறிமுகப்படுத்தியது. இது இந்திய மசாலா ஏற்றுமதியாளர்களை உலகம் முழுவதிலுமிருந்து வாங்குபவர்களுடன் இணைக்கும்.

- ✓ The spicexchangeindia.com என்பது மசாலா ஏற்றுமதிக்காக பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட ஒரு முப்பரிமான மெய்நிகர் தளமாகும்.
- ✓ இந்த வகையில் முதலாவதாகிய இந்தத் தளம் ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டுள்ளது.

APOLLO STUDY CENTRE

# நீதிமன்றத் தீர்ப்புகள்

- **இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு ஒதுக்கீடு**
  - ✓ ஜனவரி 7 அன்று, உச்ச நீதி மன்றம் - அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களின்கீழ் எம்பிபிஎஸ் மற்றும் எம்டி படிப்புகளில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு ஒதுக்கீடு வழங்குவதற்கு ஒப்புதல் அளித்தது.
  - ✓ 2021-22 கல்வியாண்டில் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினருக்கு கூடுதலாக 10 விழுக்காடு இடங்களை ஒதுக்கவும் இது ஒன்றிய அரசுக்கு அனுமதி அளித்துள்ளது.
  - ✓ 2021-22ஆம் ஆண்டிற்கான இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைக்காக ஜனவரி 2019ல் அறிவிக்கப்பட்டது.

- **50 விழுக்காடு முதுநிலை மருத்துவப்படிப்பு இருக்கைகள்**
  - ✓ சென்னை உயர்நீதி மன்றம் - மாநில ஒதுக்கீட்டில் கிராமப்புறங்களில் பணிபுரியும் பணியில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு 50 விழுக்காடு முதுநிலை மருத்துவ இடங்களையும், ஊக்கமளிக்கும் விதமாக கூடுதலாக 30 மதிப்பெண்களையும் ஒதுக்குவதற்கான தமிழகத்தின் முடிவை உறுதி செய்துள்ளது.
  - ✓ இதன்படி, எதிர்காலத்தில் பணியில் உள்ள விண்ணப்பதாரர்கள் 50 விழுக்காடு இட ஒதுக்கீடு மற்றும் திறந்த நிலை ஆகிய இரண்டிலும் போட்டியிடலாம்.
  - ✓ சேர்க்கைக்கான நீட் மதிப்பெண்களுடன் பரிசீலிக்கப்படும், மலைப்பாங்கான – கடினமான – கிராமப்புறங்களில் பணிக்கான வெயிட்டேஜ் மதிப்பெண்களை வழங்குவதற்கான ஆட்சேபனைகளையும் நீதிபதி நிராகரித்தார்.
  - ✓ அரசியலமைப்புச் சட்டத்தின் 25வது பதிவு பட்டியல் 3 முழுவதுமாக மாநிலத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டது என்று நீதிபதி உறுதிசெய்தார்.

- **இந்து வாரிசுரிமைச் சட்டம் (Hindu Succession Act), 1956**
  - ✓ ஜனவரி 20 அன்று, உச்ச நீதிமன்றம் - தந்தை உயில் எழுதாமல் இறந்துவிட்டால், அவர் சுயமாகச் சம்பாதித்த மற்றும் பிற பரம்பரைச் சொத்துக்களை வாரிசாகப் பெற இந்து தந்தையின் மகள்களுக்கு உரிமை உண்டு என்று தீர்ப்பளித்துள்ளது.
  - ✓ சென்னை உயர்நீதி மன்றத் தீர்ப்பை எதிர்த்த மேல்முறையீட்டு வழக்கில் வழங்கப்பட்ட இந்த மைல்கல் தீர்ப்பானது, இந்து வாரிசுச் சட்டம், 1956ன்கீழ் இந்துப் பெண்கள் மற்றும் விதவைகளின் சொத்துரிமை தொடர்பானது ஆகும்.
  - ✓ இந்தத் தீர்ப்பின்படி, இறந்த தந்தையின் சகோதரர்களின் மகன்கள் மற்றும் மகள்கள் போன்ற குடும்பத்தின் இதர இணை உறுப்பினர்களை விட அத்தகைய மகள்கள் முன்னுரிமை பெறுவார்கள்.
  - ✓ 1956ஆம் ஆண்டுக்கு முன்னர் தந்தை இறந்திருந்தாலும், சொத்துக்களை பிரிப்பதில் வாரிசுரிமைச் சட்டம் பொருந்தும் என்று அது கூறியது.

# சர்வதேச செய்திகள்

- **யூரோபோல் (Europol)**
  - ✓ சமீபத்தில் ஐரோப்பாவிற்கு வெளியே யூரோபோலில் இணைந்த 10 வது நாடாக தென்கொரியா மாறியுள்ளது.
  - ✓ 27 ஐரோப்பிய ஒன்றிய நாடுகளால் ஒருமனதாக அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன்மூலம் தென்கொரியாவின் தேசிய காவல் முகமை யூரோபோலுடன் இணைந்தது.
  - ✓ யூரோபோல் என்பது பயங்கரவாதம் மற்றும் பிற சர்வதேச குற்றங்களை எதிர்த்துப் போராடும் ஐரோப்பிய ஒன்றிய சட்ட அமலாக்க ஒத்துழைப்பு நிறுவனம் ஆகும்.

- **ஐரோப்பிய யூனியன் தலைமை (European Union Presidency)**
  - ✓ ஜனவரி 01, 2022 முதல் ஐரோப்பிய ஒன்றிய கவுன்சிலின் தலைமைப் பொறுப்பை பிரான்ஸ் ஏற்றுக் கொண்டது. இந்த நாடு அடுத்த ஆறு மாதங்களுக்கு ஜுன் 30, 2022 வரை ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பதவியை வகிக்கும்.

- **உலகின் மிக நீளமான மெட்ரோ ரயில் பாதை**
  - ✓ உலகின் மிக நீளமான மெட்ரோ ரயில் பாதை சீனாவில் திறக்கப்பட்டுள்ளது.
  - ✓ ஷாங்காய் இரண்டு புதிய மெட்ரோ ரயில் பாதைகளைத் திறந்து, உலகின் மிகப்பெரிய மெட்ரோ நெட்வொர்க்கைக் கொண்ட நகரமாகத் திகழ்கிறது.
  - ✓ புதிய பாதைகளுடன், ஷாங்காயில் மெட்ரோ நெட்வொர்க்கின் மொத்த நீளம் 831 கிமீ வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இது உலகிலேயே மிகவும் நீளமானது ஆகும்.

- **ஐரோப்பிய ஒன்றியம்**
  - ✓ ஐரோப்பிய ஒன்றியத்தின் சுழலும் தலைமைப் பொறுப்பை பிரான்ஸ் ஜனவரி 1, 2022 அன்று ஏற்றுக் கொண்டது.
  - ✓ கடந்த 14 ஆண்டுகளில் முதன்முறையாக பிரான்ஸ் தலைமைப் பொறுப்பை தற்போது ஏற்றுள்ளது.
  - ✓ இந்த ஒன்றியத்தின் தலைமைப் பொறுப்பு ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளிடையே ஒவ்வொரு 6 மாதங்களுக்கும் மாறும் தன்மை கொண்டது ஆகும்.

- **நீதிபதி ஆயிஷா மாலிக்**
  - ✓ பாகிஸ்தான் - நாடு சுதந்திரம் அடைந்த 75 ஆண்டுகளில் முதல் பெண் உச்ச நீதிமன்ற நீதிபதியாக - லாகூர் உயர் நீதிமன்ற நீதிபதி ஆயிஷா மாலிக் -நியமனத்தை உறுதி செய்துள்ளது.

- **டாக்கா சர்வதேச திரைப்பட விழா 2022**
  - ✓ வங்காளதேசத்தின் டாக்கா, 20வது டாக்கா சர்வதேச திரைப்பட விழாவை நடத்துகிறது
  - ✓ ஜனவரி 15 மற்றும் 23ஆம் தேதிகளுக்கு இடையில், டாக்கா முழுவதும் பல்வேறு இடங்களில், டாக்கா முழுவதும் பல்வேறு இடங்களில் பத்து பிரிவுகளில் 70 நாடுகளில் இருந்து 225 திரைப்படங்கள் திரையிடப்படும்.

- பிரதமர் மோடி உலகப் பொருளாதார மன்றத்தில் பி3 இயக்கத்தை அறிமுகப்படுத்தினார்.

- ✓ உலகப் பொருளாதார மன்றத்தின் டாவோஸ் நிகழ்ச்சி நிரல் 2022இல் இந்தியாவின் காலநிலை மாற்றக் கடமைகளை அடிக் கோடிட்டுக் காட்டும் பி3 (Pro-Planet-People) இயக்கத்தை பிரதமர் நரேந்திர மோடி அறிமுகப்படுத்தினார்.
- ✓ இந்த பி3 இயக்கத்தின்கீழ், காலநிலைக்கு நமது வாழ்க்கைமுறை ஏற்படுத்தும் சவால்களை பிரதமர் மோடி எடுத்துரைத்தார். தூக்கி எறியும் கலாச்சாரம் காலநிலை மாற்றத்தை ஆழப்படுத்தியுள்ளது என்று அவர் கூறினார்.
- ✓ 'டேக் -மேக்- யூஸ் டிஸ்போஸ்' பொருளாதாரத்தில் இருந்து வட்டப் பொருளாதாரத்திற்கு மாறுவது முக்கியம் என்று அவர் தெரிவித்தார்.

## ➢ திருமதி உலகப் பேரழகி 2022 (Mrs World 2022)

- ✓ திருமதி அமெரிக்கா ஷைலின் ∴போர்டு 2022ஆம் ஆண்டுக்கான திருமதி உலகப் பேரழியாக முடிசூட்டப்பட்டார்.
- ✓ அவர் ஓஹியோவின் கிரான்வில்லியைச் சேர்ந்தவர்.
- ✓ இந்த திருமதி உலகப்பேரழகி 2022 போட்டியானது, ஜனவரி 2022இல் அமெரிக்காவின் நெவாடாவில் உள்ள லாஸ் வேகாஸில் நடைபெற்றது.

## ➢ நுசந்தாரா - இந்தோனேசியாவின் புதிய தலைநகரம்

- ✓ இந்தோனேசியர்கள் புதிய தலைநகருக்கு இடம்பெயர்கிறார்கள். அது கிழக்கு காளிமந்தன் ஆகும்.
- ✓ அது தற்போது 'நுசந்தரா' என்று அழைக்கப்படுகிறது. முன்னதாக ஜாகர்த்தா இந்தோனேசியாவின் தலைநகராக இருந்தது.

## ➢ 555.55 காரட் கருப்பு வைரம் - தி எனிக்மா (The Enigma)

- ✓ எனிக்மா என்று அழைக்கப்படும் 555.55 காரட் கருப்பு வைரம், பிப்ரவரியில் லண்டனில் ஏலம் விடப்படும். இது கிட்டத்தட்ட 9.5 மில்லியன் டாலர்களுக்கு விற்பனை செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ 55 அம்சங்களையும் கொண்ட இந்த வைரத்திற்கு 'ஐந்து' என்ற எண் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.
- ✓ 2.6 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு சிறு கோள் அல்லது ஒரு விண்கல் பூமியைத் தாக்கியபோது இந்த வைரம் உருவாக்கப்பட்டதாக நம்பப்படுகிறது.

## ➢ ஹோண்டுராசின் முதல் பெண் அதிபர்

- ✓ ஹோண்டுராசின் முதல் பெண் அதிபராக சியோமாரா கேஸ்ட்ரோ ஜனவரி 27, 2022 அன்று பதவியேற்றார்.
- ✓ அவர் ஹோண்டுராசின் முன்னாள் முதல் பெண்மணி ஆவார். ஏனெனில் அவர் 2009ல் ஆட்சிக் கவிழ்ப்பில் பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் அதிபர் மானுவல் ஜெலயாவின் மனைவி ஆவார்.

## ➢ உலகின் மிகப்பெரிய கால்வாய் பூட்டு

- ✓ டச்சு மன்னர் வில்லெம் அலெக்சாண்டர், ஜனவரி 2022இல் இஜ்முய்டன் கடல் பூட்டை அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைத்தார். இஜ்முய்டன் என்பது வட கடல் வாய்வாயை ஆம்ஸ்டர்டாம் துறைமுகத்துடன் இணைக்கும் ஒரு சிறிய துறைமுக நகரம் ஆகும். இது உலகின் மிகப்பெரிய கடல் பூட்டு ஆகும்.
- ✓ இந்த மாபெரும் உள்கட்டமைப்புத் திட்டத்தின் கட்டுமானம் 2016இல் தொடங்கப்பட்டு 2021இல் நிறைவடைந்தது.

# இந்தியா மற்றும் இதர நாடுகள்

- **பசுமை எரிபொருட்கள்**
  - ✓ இந்தியாவும் டென்மார்க்கும் பசுமை எரிபொருட்கள் பற்றிய கூட்டு ஆராய்ச்சியைத் தொடங்க ஒப்புக் கொண்டுள்ளன.
  - ✓ பச்சை ஹைட்ரஜன் உள்ளிட்ட பசுமை எரிபொருட்கள் குறித்த கூட்டு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டைத் தொடங்குவதற்கு இந்தியாவும் டென்மார்க்கும் ஒப்புக் கொண்டுள்ளன.
  - ✓ இரண்டு நாடுகளின் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளில் தேசிய மூலோபாய முன்னுரிமைகள் மற்றும் மேம்பாடுகள் குறித்து விவாதிக்க 2022 ஜனவரியில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் குழுவின் கூட்டுக் கூட்டம் நடைபெற்றது.

- **இந்தியாவும் இஸ்ரேலும்**
  - ✓ இந்தியா மற்றும் இஸ்ரேல் - சமீபத்தில் ஜனவரி 18 அன்று நடைபெற்ற அதன் எட்டாவது ஆளுகைக் குழுக் கூட்டத்தில் இருதரப்பு தொழில்துறை ஆராய்ச்சி மற்றம் வளர்ச்சி மற்றும் தொழில்நுட்பக் கண்டுபிடிப்பு நிதியின் (14எப்) நோக்கத்தை விரிவுபடுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது.
  - ✓ 5.5 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள மூன்று கூட்டு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு இந்த இரண்டு நாடுகளும் ஒப்புதல் அளித்தன. மேலும் அவை, பரந்த இந்தியா - இஸ்ரேல் கூட்டுச் சூழலை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளையும் பரிந்துரைத்தன.

- **இந்தியாவும் பிரான்சும்**
  - ✓ இந்தியாவும் பிரான்சும் - வளர்ந்து வரும் மற்றும் மீண்டும் வளர்ந்து வரும் தொற்று நோய்கள் மற்றும் பரம்பரைக் கோளாறுகள் பற்றிய கூட்டு ஆராய்ச்சிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
  - ✓ பிரான்ஸ் இன்ஸ்டிடியூட் பாஸ்டர் மற்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்தியாவின் அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சில் (CSIR) ஆகியவற்றினிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

 044-24339436, 044-42867555, 9840226187

# மாநாடுகள் மற்றும் உச்சி மாநாடுகள்

➢ **G7 தலைமை**

- ✓ ஜனவரி 1ஆம் தேதி, ஜி7 தலைமைப் பொறுப்பை ஜெர்மனி பெற்றுக் கொள்கிறது.
- ✓ 2022ஆம் ஆண்டுக்கான ஜி7 உச்சி மாநாடு 2022 ஜுன் 26 முதல் 28 வரை பவேரியன் ஆப்சில் நடைபெற உள்ளது.

➢ **மின் ஆளுகை 2021க்கான 24வது தேசிய மாநாடு**

- ✓ 24வது தேசிய மின் ஆளுகை மாநாடு அதன் ஐதராபாத் பிரகடனத்தில் டிஜிட்டல் தளங்கள் மூலம் குடிமக்களையும் அரசாங்கங்களையும் நெருக்கமாகக் கொண்டு வரவும், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி குடிமக்கள் சேவைகளை மாற்றவும் தீர்மானித்துள்ளது.
- ✓ இந்த மாநாட்டின் மையக் கருத்து, ‘இந்தியாவின் தொழில்நுட்பம் : பெருந்தொற்றுக்குப் பிந்தைய உலகில் டிஜிட்டல் ஆளுகை’ என்பதாகும்.

➢ **உலகப் பொருளாதார மன்றம் டாவோஸ் அஜென்டா உச்சி மாநாடு**

- ✓ உலகப் பொருளாதார மன்றத்தின் (World Economic Forum) டாவோஸ் நிகழ்ச்சி நிரலின் மெய்நிகர் நிகழ்வில் பிரதமர் நரேந்திர மோடி 17 ஜனவரி 2022 அன்று உரையாற்றினார்.
- ✓ இந்த நிகழ்ச்சியானது ‘உலகத்தின் நிலை’ என்ற மையப் பொருளில் கூட்டப்படுகிறது.
- ✓ 2022ஆம் ஆண்டுக்கான டாவோஸ் நிகழ்ச்சி நிரல் ஆனது நிகர பூஜ்ஜிய உமிழ்வுக்கான பந்தயத்தை விரைவுபடுத்துவதற்காக பல உலகப் பொருளாதார மன்றங்களின் முன் முயற்சிகளின் தொடக்கத்தைக் குறிக்கும்.

➢ முதலாவது இந்தியா – மத்திய ஆசிய உச்சி மாநாடு

- ✓ பிரதமர் மோடி 2022 ஜனவரி 27 அன்று முதலாவது இந்தியா – மத்திய ஆசிய உச்சி மாநாட்டை நடத்துகிறார்.
- ✓ கிர்கிஸ்தான் குடியரசு, கஜகஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், துர்க்மெனிஸ்தான் ஆகிய நாடுகளின் அதிபர்களின் பங்கேற்புடன் இந்த உச்சி மாநாடு நடைபெறும்.
- ✓ ஏதிர்வரும் உச்சிமாநாடு இந்தியாவிற்கும் மத்திய ஆசிய நாடுகளுக்கும் இடையே தலைவர்கள் மட்டத்தில் இந்த வகையில் முதலாவதான ஈடுபாடாக இருக்கும்.

# பாதுகாப்பு

## ➢ SAHAYAK-NG

- ✓ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அமைப்பு இந்திய கடற்படையுடன் இணைந்து கோவாவில் ஐஎல்-38எஸ்டி விமானத்தில் இருந்து 'சஹாயக்-என்ஜி' (SAHAYAK-NG) என்ற ஒரு சோதனையை நடத்தியது.
- ✓ 'சஹாயக்-என்ஜி' என்பது இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட வின்னில் இருந்து இறக்கக்கூடிய கொள்கலன் ஆகும்.

## ➢ மிலன் 2022 பயிற்சி (Exercise Milan 2022)

- ✓ விசாகப்பட்டினத்தில் பிப்ரவரி 25, 2022 முதல் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள 'மிலன்' என்ற பன்னாட்டு கடற்படைப் பயிற்சியில் பங்கேற்க மொத்தம் 46 நாடுகளுக்கு இந்தியா அழைப்பு விடுத்துள்ளது.
- ✓ இந்த மிலன் பயிற்சிப் பதிப்பின் கருப்பொருள் 'தோழமை, ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பு' ஆகும்.

## ➢ கடல் டிரேகன் (Sea Dragon) 2022

- ✓ **மேற்குப்** பசிபிக் பகுதியில் உள்ள குவாமில் நடைபெறும் சீ டிராகன் 2022 எனற பன்னாட்டுப் பயிற்சியில் இந்தியா பங்கேற்கிறது.
- ✓ அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, இந்தியா, ஜப்பான் மற்றும் தென் கொரியா ஆகிய ஆறு நாடுகள் இந்தப் பயிற்சியில் கலந்து கொள்கின்றன.

## ➢ பிரம்மோஸ் குரூஸ் ஏவுகணை (BrahMos Cruise Missile)

- ✓ ஜனவரி 11 அன்று, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு - சூப்பர்சோனிக் பிரம்மோஸ் ஏவுகணையின் கடற்படை மாறுபாட்டை வெற்றிகரமாக சோதனை செய்தது.
- ✓ இந்த ஏவுகணையானது இந்திய கடற்படையின் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட மறைமுக வழிகாட்டல் ஏவுகணை அழிப்புக் கப்பலான ஐஎன்எஸ் விசாகப்பட்டினத்திலிருந்து மேற்குக் கடற்கரையில் இருந்து ஏவப்பட்டது.

## ➢ மனிதனால் எடுத்துச் செல்லப்படக்கூடிய பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணை (Man-Portable Anti-Tank Guided Missile)

- ✓ ஜனவரி 11 அன்று, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு – மனிதனால் எடுத்துச் செல்லப்படக்கூடிய பீரங்கி எதிர்ப்பு வழிகாட்ழ ஏவுகணையின் இறுதி விநியோகக் கட்டமைப்பை வெற்றிகரமாகச் சோதனை செய்தது.

## ➢ பாசெக்ஸ் (PASSEX)

- ✓ ரஷ்யக் கப்பல் அட்மிரல் டிரிபட்ஸ் மற்றும் ஐஎன்எஸ் கொச்சி ஆகியவை ஜனவரி 14 அன்று அரபிக் கடலில் பாசெக்ஸ் பயிற்சியை மேற்கொண்டன.
- ✓ இந்த இரண்டு கடற்படைகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு மற்றும் இயங்குதன்மையை வெளிப்படுத்தும் வகையில் இந்தப் பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

## ➢ பிரம்மோஸ் ஏவுகணை (Brahmos Missile)

- ✓ பிரம்மோஸ் ஏவுகணையின் புதிய பதிப்பை இந்தியா வெற்றிகரமாக பரிசோதித்தது


APOLLO STUDY CENTRE

- ✓ 20 ஜனவரி 2022 அன்று ஒடிசா கடற்கரையில் பரம்மோஸ் சூப்பர்சோனிக் கப்பல் ஏவுகணையின் புதிய பதிப்பை இந்தியா வெற்றிகரமாக சோதனை செய்தது.
- ✓ பிரம்மோஸ் ஏவுகணை 2.8 மேக் வேகத்தில் அதாவது ஒலியை விட கிட்டத்தட்ட மூன்று மடங்கு வேகத்தில் பறக்கும்.

## ➢ பிரம்மோஸ் சூப்பர்சோனிக் குரூஸ் ஏவுகணைகள் (BrahMos Supersonic Cruise Missiles)

- ✓ ஜனவரி 28 அன்று, இந்தியா – பிலிப்பைன்ஸுக்கு பிரம்மோஸ் சூப்பர்சோனிக் குரூஸ் ஏவுகணைகளை ஏற்றுமதி செய்வதற்கான 374.96 மில்லியன் டாலர் (2770 கோடி) ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- ✓ இது இந்தியாவின் முதல் குறிப்பிடத்தக்க பாதுகாப்பு ஏற்றுமதியாகும். இந்தியா மற்றும் ரஷ்யாவின் கூட்டு தயாரிப்பான இந்த ஏவுகணைக்கான முதல் ஏற்றுமதி ஆணை இதுவாகும்.

## ➢ ALH Mark-III

- ✓ ஜனவரி 28 அன்று, மூலோபாய ரீதியாக அமைந்துள்ள அந்தமான் மற்றும் நிக்கோபார் கமாண்ட் - போர்ட்பிளேரில் உள்ள கடற்படைத் தளமான ஐஎன்எஸ் உட்க்ரோஷல் உள்நாட்டு மேம்பட்ட ஒளி ஹெலிகாப்டர்களின் (advanced light helicopters -ALH Mark-III) சமீபத்திய கடற்சார் பதிப்பை முறையாக அறிமுகப்படுத்தியது.

## ➢ ஐஎன்எஸ் குக்ரி - இந்தியாவின் முதலாவது முழு போர்க்கப்பல் அருங்காட்சியகம்

- ✓ ஐஎன்எஸ் குக்ரி, முதன்முதலில் கட்டமைக்கப்பட்ட ஏவுகணை கோர்வெட் ஆனது, 32 வருட சேவைக்குப் பிறகு டிசம்பர் 2021 அன்று நீக்கப்பட்டது. இது ஜனவரி 26, 2022 அன்று டையூ நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.
- ✓ இந்த ஐஎன்எஸ் குக்ரி, இந்தியாவின் முதலாவது முழுபோர்க்கப்பல் அருங்காட்சியகமாக மாற்றப்படும்.

## ➢ பஸ்கிம் லெஹர் (Paschim Lehar) (XPL-2022)

- ✓ இந்தியக் கடற்படையால் நடத்தப்பட்ட கூட்டு முப்படைகளின் கடல்சார் பயிற்சியான 'பஸ்கிம் லெஹர்' (XPL-2022) – ஜனவரி 25, 2022 அன்று மேற்குக் கடற்கரையில் நிறைவடைந்தது.
- ✓ இந்திய கடற்படை, இந்திய விமானப்படை, இந்திய இராணுவம் மற்றும் இந்திய கடலோர காவல்படை ஆகியவற்றுக்கு இடையேயான சேவைகளுக்கு இடையில் ஒருங்கிணைப்பை மேம்படுத்தவும், மேற்கு கடற்படை கட்டளையின் செயல்பாட்டுத் திட்டங்களைச் சரிபார்க்கவும் 20 நாட்களுக்கு மேல் பயிற்சி நடத்தப்பட்டது.

APOLLO STUDY CENTRE

# பொருளாதாரம்

➢ **ஒருங்கிணைந்த கட்டண இடைமுகம் (Unified Payments Interface)**

✓ ஒருங்கிணைந்த கட்டண இடைமுக பரிவர்த்தனைகள் - 2021 டிசம்பரில், அளவு மற்றும் மதிப்பு அடிப்படையில் புதிய சாதனையை எட்டியது.

✓ இந்திய பணக்கொடுப்புக் கழகம் (National Payments Corporation of India) வெளியிட்ட தரவுகளின்படி, டிசம்பரில் ரூ.8.27 டிரில்லியன் மதிப்புள்ள 4.56 பில்லியன் பரிவர்த்தனைகளை இந்திய பணக்கொடுப்புக் கழகம் பதிவு செய்துள்ளது.

✓ **மிக உயர்ந்த மாதாந்திர ஏற்றுமதி**

✓ டிசம்பர் 2021ல் இந்தியா அதன் அதிகபட்ச மாதாந்திர ஏற்றுமதியான 37 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியுள்ளது. இது டிசம்பர் 2020 லிருந்து 37 விழுக்காடு உயர்வு ஆகும்.

➢ இந்தியாவின் முதலாவது கிரிப்டோ கரன்சி அட்டவணை ஐசி 15 (**India's First Cryptocurrencies Index IC15)**

✓ உலகளாவிய கிரிப்டோகரன்சி செயலியான கிரிப்டோவயர், ஐசி 15 என்ற இந்தியாவின் முதல் கிரிப்டோகரன்சி குறியீட்டை அறிமுகப்படுத்தியுள்ளது. ஐசி 15, உலகின் முன்னணி கிரிப்டோ பரிவர்த்தனைகளில் பட்டியலிடப்பட்டுள்ள சந்தை மூலதனத்தின் அடிப்படையில், உலக அளவில் முதல் 15 உலகளாவிய டிஜிட்டல் நாணயங்களின் சந்தை மூலதனம் மற்றும் பணப்புழக்கத்தைக் கண்காணிக்கும்.

➢ **ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் (Reliance Industries)**

✓ ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரிஸ் - ஒரு இந்திய நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட அளவாக, வெளிநாட்டு நாணய பத்திர விற்பனையில் 4 பில்லியன் அமெரிக்க டாலர்களைத் திரட்டியுள்ளது.

✓ ஆசியா (53 விழுக்காடு), அமெரிக்க (33 விழுக்காடு) மற்றும் ஐரோப்பாவில் (14 விழுக்காடு) முதலீட்டாளர்களால் இந்த பத்திரங்கள் வாங்கப்பட்டன.

➢ **மத்திய விழிப்புப் பணிகள் ஆணையம் (Central Vigilance Commission)**

✓ 3 கோடிக்கு மேல் உள்ள அனைத்து வங்கி மோசடி வழக்குகளையும் மத்திய புலனாய்வுக் குழு (சிபிஐ) விசாரிக்க வேண்டுமா என்பதைத் தீர்மானிக்க நிபுணர் குழுவுக்கு அனுப்பப்படும் என்று மத்திய விழிப்புப் பணிகள் ஆணையம் - விதிகளில் திருத்தம் செய்துள்ளது.

✓ 3 கோடி முதல் 50 கோடி வரையிலான வழக்குகளுக்கு தனி வாரியம் அமைக்கப்படும் என மத்திய விழிப்புப் பணிகள் ஆணையம் தெரிவித்துள்ளது.

➢ **இந்தியப் பொருளாதாரம்**

✓ இந்தியப் பொருளாதாரம் - மார்ச் 2022இல் முடிவடையும் நிதியாண்டில் 8.3 விழுக்காடு வளர்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது ஜூன் 2021 கண்ணோட்டத்தில் இருந்து மாறாத நிலை ஆகும்.

✓ உலகவங்கியின் சமீபத்திய உலகளாவிய பொருளாதார வாய்ப்புகள் அறிக்கையில் இது தெரிய வந்துள்ளது.

✓ சர்வதேச நாணய நிதியமும் இந்தியாவிற்கு 9.5 விழுக்காடு வளர்ச்சியைக் கணித்துள்ளது.

- **கிரிப்டோ கரன்சி பரிமாற்ற – வர்த்தக நிதியம் (Cryptocurrency Exchange-Traded Fund)**

  ஆசியாவின் முதல் கிரிப்டோ கரன்சி பரிமாற்ற – வர்த்தக நிதியம் - இந்த ஆண்டு இந்தியாவில் GIFT நகரத்தில் தொடங்கப்படலாம்.
  டோரஸ் கிளிங் பிளாக்செயின் ஐஎபிஎஸ்சி ஆனது, டிஜிட்டல் சொத்து அடிப்படையிலான தயாரிப்புகளை அறிமுகப்படுத்துவதற்கு பிஎஸ்இ-இன் சர்வதேச நிறுவனமான இந்தியா ஐஎன்எக்ஸ் உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இது கிப்ட் நகரின் ஐஎப்எஸ்சி (சர்வதேச நிதிச சேவை மையம்) இல் வர்த்தகம் செய்யப்படும்.

- **ஃபின்டெக் துறை (Fintech Department)**

  இந்திய ரிசர்வ் வங்கி – ஒரு இயக்கமாக வளர்ந்து வரும் நிதித்துறையில் கவனம் செலுத்துவதற்கும், புதுமைகளை எளிதாக்குவதற்கும் ஒரு ஃபின்டெக் துறையை அமைத்துள்ளது.
  ஃபின்டெக் மீதான இடை-ஒழுங்குமுறை ஒருங்கிணைப்பு மற்றும் உள் ஒருங்கிணைப்பு தொடர்பான அனைத்து விஷயங்களும் இந்தத் துறையால் கையாளப்படும்.

- **இந்திய தேசிய பங்குச் சந்தை (National Stock Exchange of India)**
  - ✓ வர்த்தகம் செய்யப்பட்ட ஒப்பந்தங்களின் எண்ணிக்கை அடிப்படையில் 2021ஆம் ஆண்டில் இந்தியாவின் தேசிய பங்குச் சந்தை உலகின் மிகப்பெரிய வழித்தோன்றல் பரிமாற்றமாக உருவெடுத்துள்ளது.
  - ✓ 2021ஆம் ஆண்டிற்கான உலகச் செலாவணி கூட்டமைப்பு (**World Federation of Exchanges**) பராமரிக்கும் புள்ளி விவரங்களின்படி, வர்த்தகங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்திய தேசியப் பங்குச் சந்தையானது, பணப்பங்குகளில் உலகில் நான்காவது இடத்தில் உள்ளது.

- **IREDA இல் 1500 கோடி ரூபாய்**
  - ✓ இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு முகமை லிமிடெட்டில் 1500 கோடி ரூபாயை செலுத்துவதற்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
  - ✓ இது ஆண்டுக்கு 10,200 வேலைகளை உருவாக்கவும், ஆண்டுக்கு சுமார் 7.49 மில்லியன் டன்களுக்குச் சமமான கார்பன் வெளியேற்றத்தைக் குறைக்கவும் உதவும்.

- **வெள்ளரிக்காய் மற்றும் கெர்கின்ஸ் ஆகியவற்றின் மிகப்பெரிய ஏற்றுமதியாளர்கள்**
  - ✓ உலகிலேயே வெள்ளரிக்காய் மற்றும் கெர்கின்களை அதிக அளவில் ஏற்றுமதி செய்யும் நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.
  - ✓ ஏப்ரல் முதல் அக்டோபர் 2020-21 காலத்தில் 114 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பில் 1,23,000 மெட்ரிக் டன்களுக்கு மேல் வெள்ளரி மற்றும் கெர்கின்சை இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது.

- **உலக பொருளாதாரக் கண்ணோட்டம்**
  - ✓ சர்வதேச நாணய நிதியத்தின் உலகப் பொருளாதாரக் கண்ணோட்டத்தின்படி, இந்தியாவின் பொருளாதாரம் நடப்பு நிதியாண்டில் 9 விழுக்காடு வளர்ச்சி அடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
  - ✓ இது கோவிட்-19 பெருந்தொற்றின் மூன்றாவது அலையின் தாக்கத்தின் பின்னணியில், இந்த முகமையின் முந்தைய அறிவிப்பு 9.5 விழுக்காடை விட சற்று குறைவாக உள்ளது.

- ✓ சர்வதேச நாணய நிதியம் இந்தியாவின் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி மதிப்பீட்டை 2022-23 ஆம் ஆண்டிற்கான அதன் முந்தைய மதிப்பீட்டில் இருந்து அக்டோபர் மாதம் 8.5 விழுக்காடு ஆக உயர்த்தியது. 2023-24இல் பொருளாதாரம் 7.1 விழுக்காடு வளர்ச்சியடையும் என்று இது கணித்துள்ளது.

### ➢ 2026க்குள் 300 பில்லியன் அமெரிக்க டாலர் நிலையான மின்னணு உற்பத்தி மற்றும் ஏற்றுமதி

- ✓ மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், இந்திய செல்லுலார் மற்றும் மின்னணுியல் கூட்டமைப்பு (India Cellular and Electronics Association) உடன் இணைந்து – அதன் தொலைநோக்கு ஆவணமான, '2026க்குள் 300 பில்லியன் அமெரிக்க டாலர்கள் நிலையான மின்னணுவியல் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிகள்' ஐ வெளியிட்டது.
- ✓ தற்போதைய 75 பில்லியன் டாலரில் இருந்து. 300 பில்லியன் டாலர் மின்னணுவியல் உற்பத்தி சக்தியாக இந்தியாவை மாற்ற வழிவகுக்கும் பல்வேறு தயாரிப்புகளுக்கான ஆண்டுவாரியான உற்பத்தி மற்றும் கணிப்பு விவரங்களை இந்த அறிக்கை வழங்குகிறது.

### ➢ தேசிய சொத்து மறுசீரமைப்பு நிறுவனம் (National Asset Reconstruction Company)

- ✓ தேசிய சொத்து மறுசீரமைப்பு நிறுவனம், தனது செயல்பாடுகளைத் தொடங்குவதற்கான அனைத்து அனுமதிகளையும் பெற்றுள்ளது.
- ✓ மோசமான வங்கி என்றும் அழைக்கப்படும் இந்த தேசிய சொத்து மறுசீரமைப்பு நிறுவனம், செயல்படாத கடன்களையும் எடுத்துக் கொள்ள முனைகிறது.
- ✓ வங்கிகளில் இருந்து ரூ.50,000 கோடி மதிப்புள்ள 5 கடன்கள் மார்ச் 2022 இறுதிக்குள் மோசமான வங்கிக்கு மாற்றப்படும்.

### ➢ கூகுள்

- ✓ அமெரிக்க இணைய நிறுவனமான கூகுள் - டெல்லியைச் சேர்ந்த தொலைத் தொடர்பு நிறுவனமான பார்தி ஏர்டெல் உடன் இணைந்து 1 பில்லியன் டாலர் வரை முதலீடு செய்வதாக அறிவித்துள்ளது.
- ✓ இதில் பார்தி ஏர்டெல் நிறுவனத்தில் 1.28 விழுக்காடு பங்குக்கான 700 மில்லியன் டாலர் பங்கு முதலீடும் அடங்கும்.
- ✓ மேலும், கூகுள் 300 மில்லியன் டாலர்களை பல்லாண்டு வர்த்தக ஒப்பந்தங்களில் முதலீடு செய்யும். இதில் மலிவு விலையில் எல்லா விலைகளிலும் ஸ்மார்ட் போன்கள் உற்பத்திக்கான முதலீடு மற்றும் 5 ஜிக்கான இந்தியாவுக்கான பயன்பாட்டு நேர்வுகளில் கவனம் செலுத்துதல் ஆகியவை அடங்கும்.

### ➢ மின்னணு பொருட்கள் ஏற்றுமதி

- ✓ இந்தியாவில் மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதி – 2020ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் இருந்த 7.4 பில்லியன் டாலர்களுடன் ஒப்பிடுகையில், 2021 ஏப்ரல் - டிசம்பர் மாதங்களில் 49 விழுக்காடு வளர்ச்சியை அடைந்து 11.0 பில்லியன் டாலராக பதிவு செயயப்பட்டுள்ளது.
- ✓ ஏப்ரல் - நவம்பர் 2021இல் முதல் ஐந்து ஏற்றுமதி இடங்கள் - அமெரிக்கா (18 விழுக்காடு), ஐக்கிய அரபு அமீரகம் (16.6 விழுக்காடு), சீனா (7.6 விழுக்காடு), நெதர்லாந்து (4.5 விழுக்காடு) மற்றும் ஜெர்மனி (4.2 விழுக்காடு).
- ✓ இந்தியாவின் மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் மொபைல் போன்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

# நியமனங்கள்

- **டி.எஸ். திருமூர்த்தி**
- ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியாகிய டி.எஸ். திருமூர்த்தி – ஜனவரி 4, 2022 அன்று ஐக்கிய நாடுகள் சபையின் பயங்காரவாத எதிர்ப்புக் குழுவின் புதிய தலைவராக நியமனம் செய்யப்பட்டார்.

**எஸ். சோமநாத்**

- புகழ்பெற்ற ராக்கெட் விஞ்ஞானி எஸ் சோமநாத் - இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பின் பத்தாவது தலைவராகவும், விண்வெளித் துறையின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.
- பொதுவாக இஸ்ரோ தலைவர் பதவி, விண்வெளிச் செயலாளர் மற்றும் விண்வெளி ஆணைய தலைவர் பதவி ஆகியவற்றை ஒருவர் மட்டுமே வகிப்பார்.

**உர்ஜித் பட்டேல்**

- பெய்ஜிங்கை தளமாகக் கொண்ட ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியில் தெற்காசியா, பசிபிக் தீவுகள் மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் முதலீட்டு நடவடிக்கைகளுக்கான துணைத் தலைவராக இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் உர்ஜித் பட்டேல் நியமிக்கப்பட்டுள்ளார்.
- ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியானது ஆசியாவில் பொருளாதார மற்றும் சமூக விளைவுகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பலதரப்பு மேம்பாட்டு வங்கியாகும்.

**ஐரோப்பிய பாராளுமன்றத்தின் தலைவர்**

- மால்டாவைச் சேர்ந்த கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ராபர்ட்டா மெட்சோலா ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்றாவது பெண்மணி இவர் ஆவார். அவர் ஐரோப்பிய பாராளுமன்றத்தின் இளைய தலைவரும் ஆவார்.

**வி. ஆனந்த நாகேஸ்வரன்**

- ஜனவரி 28 அன்று, ஒன்றிய அரசு – வி, ஆனந்த நாகேஸ்வரனை தலைமைப் பொருளாதார ஆலோசகராக நியமித்தது.
- பொதுவாக, வரவு செலவுத் திட்டத்திற்கு முன்னதாக முன்வைக்கப்படும் பொருளாதார ஆய்வறிக்கையை உருவாக்குவது தலைமைப் பொருளாதார ஆலோசகரின் பொறுப்பாகும்.

# விருதுகள்

- **உலகளாவிய சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை நடவடிக்கை குடிமகன் விருது (Global Environment and Climate Action Citizen Award)**
- ✓ 'பசுமை மனிதன்'என்று பிரபலமாக அறியப்படும் சூரத்தின் பிரபல தொழிலதிபர் வைரல் தேசாய், சுற்றுச் சூழலுக்கான தனது ஆர்வத்திற்காக- மதிப்புமிக்க உலகளாவிய சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை நடவடிக்கை குடிமகன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.
- ✓ உலகளாவிய சுற்றுச் சூழலை மீட்டெடுக்கவும், பாதுகாக்கவும் பாடுபடும் ஒரு நபருக்கு இந்த விருது ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

- **மும்பை பத்திரிகையாளர் மன்றத்தின் சிவப்பு மை விருது (Mumbai Press Club's RedInk Award) 2020**
- ✓ ஆப்கானிஸ்தானில் பணியின்போது இறந்த புகைப்பட பத்திரிக்கையாளர் டேனிஷ் சித்திக், மும்பை பத்திரிகையாளர் மன்றத்தால், 2020ஆம் ஆண்டிற்கான 'ஆண்டின் சிறந்த பத்திரிகையாளர்' என்ற விருதுக்கு மரணத்திற்குப் பின் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- ✓ இந்தியத் தலைமை நீதிபதி என்.வி. ரமணா, ஆண்டுதோறும் 'பத்திரிகைத் துறையில்' சிறந்து விளங்குவோருக்கான சிவப்பு மை விருதுகளை வழங்கிறார்.

- ✓ **சர்வதேச கைவினை விருது 2021**
- ✓ கேரளாவின் கோவளத்தைச் சேர்ந்த கேரள கலை மற்றும் கைவினைக் கிராம அமைப்பு (Kerala Arts and Crafts Village Organization)க்கு உலக கைவினைக் கவுன்சில் இண்டர்நேஷனல் மூலம் உலகின் சிறந்த கைவினைக் கிராமத்திற்கான '2021ஆம் ஆண்டிற்கான சர்வதேச கைவினை விருது' வழங்கப்பட்டது.

- **தேசிய தொடக்கநிலை விருதுகள் (National Startup Awards) 2021**
- ✓ ஸ்டார்ட் அப் இந்தியா நடத்திய தேசிய தொடக்கநிலை விருதுகள் 2021இல் இந்தியா அக்சிலரேட்டர், 'நாட்டின் சிறந்த முடுக்கி' என்ற விருதைப் பெற்றுள்ளது.
- ✓ இது நாட்டின் முதன்மையான விதை முடுக்கிகளில் ஒன்றாகும். மேலும் உலகளாவிய முடுக்கி வலைத்தளத்துடன் (Global Accelerator Network) தொடர்புடைய ஒன்றே ஒன்றும் ஆகும்.

- **பிரதமரின் ராஷ்டிரிய பால் புரஸ்கார் (Pradhan Mantri Rashtriya Bal Puraskar) 2022**
- ✓ 2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளுக்கான பிரதமரின் ராஷ்டிரிய பால் புரஸ்கார் விருது வெற்றியாளர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி மெய்நிகராக உரையாடினார்.
- ✓ மொத்தம் 29 குழந்தைகளுக்கு ராஷ்ட்ரிய பால் புரஸ்கார் 2022 விருது வழங்கப்பட்டது. சமூக சேவை, விளையாட்டு, புதுமை, துணிச்சல், கலை மற்றும் கலாச்சாரம், படிப்பறிவு ஆகியவற்றில் அவர்களின் சிறந்த சாதனைகளுக்காக இந்தியா முழுவதிலும் உள்ள அனைத்து பகுதிகளில் இருந்தும் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

- **நேதாஜி விருது 2022**
- ✓ முன்னாள் ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபேக்கு நேதாஜி ஆராய்ச்சி பணியகத்தால் நேதாஜி விருது 2022 வழங்கப்பட்டது.

- ✓ நேதாஜி சுபாஷ் சந்திர போசின் 125வது பிறந்த நாளையொட்டி அவரது எல்ஜின் ரோடு இல்லத்தில் நடைபெற்ற விழாவில், கொல்கத்தாவில் உள்ள ஜப்பான் தூதர் நகாமுரா யுடகா, திரு. அபே சார்பில் விருதை பெற்றுக் கொண்டார்.

### ➢ டாக்கா சர்வதேச திரைப்பட விழா

- ✓ 20வது டாக்கா சர்வதேச திரைப்பட விழாவில் ஆசிய திரைப்படப் போட்டிப் பிரிவில் சிறந்த படத்திற்கான விருதை இந்தியாவில் இருந்து பி.எஸ். வினோத்ராஜ் இயக்கிய கூழாங்கல் திரைப்படம் வென்றது.

### ➢ பத்ம விபூஷன் விருதுகள்

- ✓ நாட்டின் 73வது குடியரசு தினத்தை முன்னிட்டு ஜனவரி 25ஆம் தேதி பத்ம விருதுகளை ஒன்றிய அரசு அறிவித்தது.
- ✓ இந்தியாவின் முதலாவது பாதுகாப்புப் படைத் தளபதி ஜெனரல் பிபின் ராவத் மற்றும் உத்தரப் பிரதேச முன்னாள் முதல்வர் கல்யாண் சிங் ஆகியோருக்கு மரணத்திற்குப் பின் இந்தியாவின் இரண்டாவது மிக உயர்ந்த குடிமகன் விருதான பத்ம விபூஷன் விருது வழங்கப்பட்டுள்ளது.
- ✓ மற்ற இரண்டு பத்ம விபூஷன் விருது பெற்றவர்கள், இந்து மத நூல்களை பிரபலப்படுத்துவதில் முக்கியப் பங்காற்றிய கோரக்பூரைச் சேர்ந்த புகழ்பெற்ற நிறுவனமான கீதா அச்சகத்தின் முன்னணி விளக்குகளில் ஒன்றான மறைந்த ராதே ஷ்யாம் கெம்கா மற்றும் மகாராஷ்டிராவைச் சேர்ந்த புகழ்பெற்ற இந்திய பாரம்பரிய பாடகர் பிரபா அத்ரே ஆவர்.

### ➢ முக்தா ஆர்யா

- ✓ ஜனவரி 25 அன்று, 12வது தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு, தேர்தல் ஆணையம் ஐஏஎஸ் அதிகாரி முக்தா ஆர்யாவுக்கு சிறந்த தேர்தல் நடைமுறைகளுக்கான விருது வழங்கி கௌரவித்தது.

### ➢ சத்ய பிரதா சாஹூ

- ✓ தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹூ, சிறப்பாக செயல்படும் மாநிலம் என்ற பிரிவின்கீழ் தேசிய விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- ✓ 2021ஆம் ஆண்டில் மாநிலத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களின்போது தேர்தல் நிர்வாகத்தின் பல்வேறு துறைகளில் ஒட்டு மொத்த செயல்திறனுக்காக இந்த விருது வழங்கப்பட்டது.

# புகழ்பெற்ற நபர்கள்

- **கேப்டன் ஹர்பிரீத் சண்டி**
  - ✓ இங்கிலாந்தில் பிறந்த இந்திய சீக்கியப் பெண் கேப்டன் ஹர்பிரீ சண்டி – தென் துருவத்திற்கு ஒரு தனிப் பயணத்தை முடித்த முதல் வண்ணப் பெண் என்ற வரலாற்றைப் படைத்துள்ளார்.

- **மாயா அங்கேலோவ்**
  - ✓ கவிஞரும் ஆர்வலருமாகிய மாயா அங்கேலோவ் - அமெரிக்க நாணயத்தில் தோன்றிய முதல் கருப்பின பெண் ஆனார்.
  - ✓ தனிமைப்படுத்தப்பட்ட தெற்கில் கற்பழிப்பு மற்றும் இனவெறி பற்றிய தன்னுடைய மூல வரலாற்றுடன், 'எனக்குத் தெரியும் ஏன் கூண்டுப் பறவை பாடுகிறது" என்ற தன்னுடைய சுயசரிதையை வெளியிட்டபிறகு, அங்கேலோவ் சர்வதேச அளவில் பிரபலம் அடைந்தார்.

- **பிரஜக்தா கோலி**
  - ✓ உள்ளடக்க உருவாக்குநரும் நடிகையுமான பிரஜக்தா கோலி இந்தியாவின் முதல் ஐநா வளர்ச்சித் திட்டத்தில் (UN Development Programme) இளைஞர் காலநிலை சாம்பியன் (Youth Climate Champion) ஆனார்.
  - ✓ ஐ.நா வளர்ச்சித் திட்டம் உடனான தன்னுடைய கூட்டாண்மையின்கீழ் அவர் இந்தப் பட்டத்தை வென்றார்.
  - ✓ பல்வேறு உலகளாவிய சமூக பிரச்சாரங்கள் மூலம் மனநலம், பெண் குழந்தைக் கல்வி மற்றும் பெண்களின் உரிமைகள் ஆகியவற்றில் அவர் ஆற்றிய பங்களிப்பின் காரணமாக அவருக்கு இந்தப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

- **பிரகாஷ் சிங் பாதல்**
  - ✓ ஐந்து முறை பஞ்சாப் முதல்வராக இருந்த பிரகாஷ் சிங் பாதல் (94 வயது) – நாட்டின் எந்தத் தேர்தலிலும் போட்டியிட்டவர்களிலேயே மிகவும் வயதானவர் ஆவார்.
  - ✓ இதற்கு முன்னதாக, 2016ல் நடைபெற்ற சட்ட சபைத் தேர்தலில், 92 வயதில் போட்டியிட்ட, கேரள முன்னாள் முதல்வர், வி.எஸ். அச்சுதானந்தன் தான் இந்த சாதனையைப் படைத்திருந்தார்.

# புத்தகங்களும் ஆசிரியர்களும்

- **இந்தியாவின் பெண்கள் பாடாத ஹீரோக்கள் (India's Women Unsung Heroes)**

✓ ஒன்றிய அரசின் கலாச்சாரத் துறை இணை அமைச்சர் மீனாகாசி லேகி, 'இந்தியாவின் பெண்கள் பாடாத ஹீரோக்கள்' என்ற தலைப்பில் ஒரு சித்திரக் காமிக் புத்தகத்தை வெளியிட்டார். இது நமது நாட்டின் மறக்கப்பட்ட பெண் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் உள்ளது.

- **அச்சமில்லாத ஆட்சி (Fearless Governance)**

✓ டாக்டர்.கிரண் பேடி எழுதிய 'அச்சமில்லாத ஆட்சி' என்ற புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது. இவர் ஓய்வு பெற்ற ஐபிஎஸ் அதிகாரியும், புதுச்சேரியின் முன்னாள் துணைநிலை ஆளுநரும் ஆவார்.

✓ இந்தப் புத்தகம் புதுச்சேரியின் துணை நிலை ஆளுநராக டாக்டர். பேடியின் ஐந்தாண்டு கால சேவையின் அடிப்படை உண்மைகள் மற்றும் அவரது 40 ஆண்டு கால இந்திய காவல்துறை சேவையின் பரந்த அனுபவத்தின் ஆகியவற்றின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது.

- **இந்தியாவின் ஒரு சிறிய புத்தகம்**

✓ ரஸ்கின் பாண்ட் எழுதிய 'இந்தியாவின் ஒரு சிறிய புத்தகம் : 75 ஆண்டு கால சுதந்திர தினக் கொண்டாட்டம்' (A Little Book of India: Celebrating 75 Years of Independence) என்ற புதிய புத்தகம் சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

✓ இந்தப் புத்தகம் இந்தியாவின் 'உடல் மற்றும் ஆன்மீக' பண்புகளின் கலவையாகும்.

✓ கடந்த 75 ஆண்டு காலத்தில் ஒரு தேசமாக இந்தியாவின் முன்னேற்றத்தையும் இது எடுத்துக்காட்டுகிறது.

APOLLO STUDY CENTRE

# அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல்

## ➢ மானோசெரோமியா ∴பிளாவோஸ்குடேட்டா (Monoceromyia Flavoscutata)

- ✓ இது சமீபத்தில் இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு புதிய சிற்றினமாகும். மானோசெரோமியா ∴பிளாவோஸ்குட்டேடாவுடன் ஆராய்ச்சியாளர்கள் மானோசெரோமியா நிக்ராவையும் (Monoceromyia nigra) கண்டறிந்தனர்.
- ✓ இவை பூ ஈக்கள் அல்லது சிர்∴பிட் ஈக்கள் போன்ற குளவிகள் ஆகும்.
- ✓ மானோசெரோமியா ∴பிளாவோஸ்குடேட்டா தமிழ்நாட்டின் திண்டுக்கல் மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.
- ✓ மானோசெரோமியா நிக்ரா அருணாசலப் பிரதேசத்தின் பஸ்தர் மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

## ➢ இஸ்ரோ (ISRO)

- ✓ 2022ஆம் ஆண்டில் பல விண்வெளிப் பயணங்களுக்கு இஸ்ரோ தயாராகிறது.
- ✓ செயற்கைக் கோள் ஏவுதல்களின் அடிப்படையில் 2021ஆம் ஆண்டு முடக்கத்திற்குப் பிறகு, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், 2022ஆம் ஆண்டில் ககன்யானின் முதல் ஆளில்லா பயணத்தை ஏவுவது உட்பட பல பணிகளுக்குத் தயாராகி வருகிறது.

## ➢ செயற்கை சூரியன்

- ✓ உண்மையான சூரியனைவிட 5 மடங்கு சக்தி வாயந்த 'செயற்கை சூரியனை' சீனா வெற்றிகரமாக சோதித்துப் பார்த்தது.
- ✓ எதிர்காலத்தில் சுத்தமான எரிசக்திகான வழியை எளிதாக்க சீனா தனது 'செயற்கை சூரியனை' பரிசோதனை செய்து வருகிறது.
- ✓ சீனாவின் செயற்கை சூரியனின் சமீபத்திய வெற்றிகரமான சோதனையில், இணைவு உலை ஆச்சரியமூட்டும் வகையில் 70 மில்லியன் டிகிரி செல்சியஸ் வெப்ப நிலையில் கிட்டத்தட்ட 20 நிமிடங்கள் வெற்றிகரமாக இயங்கியது.

## ➢ தேசிய அறிவியல் தினம் 2022

- ✓ ஒன்றிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தேசிய அறிவியல் தினம் 2022இன் கருப்பொருளை ஜனவரி 5, 2022 அன்று தொடங்கி வைத்தார்.
- ✓ அந்த மையக் கருத்து, 'நிலையான எதிர்காலத்திற்காக அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஒருங்கிணைந்த அணுகுமுறை' என்பதாகும்.
- ✓ தேசிய அறிவியல் தினம் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 28 அன்று கொண்டாடப்படுகிறது.

## ➢ கோபர்நிக்கஸ் காலநிலை மாற்ற சேவை (Copernicus Climate Change Service)

- ✓ அதன் சமீபத்திய வருடாந்திர மதிப்பீட்டில், கோப்பர்நிக்கஸ் காலநிலை மாற்ற சேவை மையமானது – 2021ஆம் ஆண்டு பூமியின் ஐந்தாவது வெப்பமான ஆண்டாக பதிவாகியுள்ளது என்பதை உறுதி செய்தது.
- ✓ ஐரோப்பிய ஒன்றியத்தின் செயற்கைக் கோள் அமைப்பான கோபர்நிக்கஸ் காலநிலை மாற்ற சேவை அமைப்பின்படி, பதிவு செய்யப்பட்ட ஆண்டுகளில் முந்தைய ஏழு வருடங்கள் மிகவும் வெப்பமானவையாகக் கருதப்படுகின்றன.
- ✓ மேலும், கடந்த ஆண்டில் உலகம் முழுவதும் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் வெப்ப அலைகள் போன்ற பல தீவிர காலநிலை நிகழ்வுகளில் அதிகரித்துவரும் வெப்பநிலையின் எதிர்மறையான தாக்கங்கள் காணப்படுகின்றன.

 044-24339436, 044-42867555, 9840226187

- **ஒரு பன்றியின் மரபணு மாற்றம் செய்யப்பட்ட இதயம்**
- ✓ முதன்முறையாக, அமெரிக்காவில் அறுவை சிகிச்சை நிபுணர்கள் - பன்றியின் மரபணு மாற்றம் செய்யப்பட்ட இதயத்தை வெற்றிகரமாக மனித நோயாளிக்கு மாற்றிப் பொருத்தியுள்ளனர்.
- ✓ வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த செயல்முறை (அறுவை சிகிச்சை) சமீபத்தில் ஜனவரி 7 அன்று சுமார் எட்டு மணி நேரம் நடைபெற்றது.
- ✓ டாக்டர் பார்ட்லி க்ரி.ஃ.பித் இந்த சாதனையில் முன்னணி அறுவை சிகிச்சை நிபுணர் ஆவார். இது நீண்ட காலத்திற்கு உறுப்பு பற்றாக்குறை நெருக்கடிக்கு ஒரு தீர்வை வழங்கும்.

- **இந்திய சனி (Indian Sat)**
- ✓ நாசா - இந்திய மாணவர்களால் உருவாக்கப்பட்ட இந்திய சனி என்ற சோதனை செயற்கைக் கோளை ஜுன் 2022இல் விண்ணில் செலுத்த உள்ளது.
- ✓ மிகச் சிறிய மற்றும் இலகுவான ஒன்றாகிய இந்த இந்திய சனி, முப்பரிமாண வலுவூட்டப்பட்ட கிராபெனின் பாலிமரைக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது.
- ✓ வெறும் 30 கிராம் எடை கொண்ட இந்த செயற்கைக் கோளை, தமிழ்நாட்டைச் சேர்ந்த விண்வெளி தொடக்க நிறுவனமான டோஸ்பேஸ் பிரைவேட் லிமிடெட் இரண்டு வருடங்களில் உருவாக்கியது.

- **ககன்யான் திட்டம்**

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் ஜனவரி 12 அன்று, ககன்யான் திட்டத்திற்குப் பயன்படுத்தப்படும் கிரையோஜெனிக் எஞ்சின் - சிஇ20 (CE-20)க்கான தகுதிச் சோதனையை வெற்றிகரமாக நடத்தியது.
தமிழகத்தின் மகேந்திரகிரியில் உள்ள இஸ்ரோ உந்து வளாகத்தில் 720 வினாடிகள் இந்த சோதனை நடத்தப்பட்டது.

- **வானொலி-அதிர்வெண் அடையாள அடிப்படையிலான மின்-கடவுச்சீட்டு (Radio-Frequency Identification based E-Passport)**
- ✓ வானொலி அதிர்வெண் அடையாளம் மற்றும் பயோமெட்ரிக்சைப் பயன்படுத்தும் மின்-கடவுச் சீட்டுகளை இந்தியா விரைவில் வழங்கத் தொடங்கும்.
- ✓ இந்தப் புதிய மின்-கடவுச்சீட்டு பயோமெட்ரிக் தரவுகளைப் பாதுகாக்கும். மேலும், சர்வதேச விமான போக்குவரத்து அமைப்பின் (International Civil Aviation Organisation) தரநிலைகளுக்கு ஏற்ப இருக்கும்.

- **டோங்காவில் எரிமலை வெடிப்பு**
- ✓ சமீபத்தில் டோங்காவில் (பசிபிக் பெருங்கடலில் உள்ள நாடு) நீருக்கடியில் எரிமலை வெடித்தது.
- ✓ இது ''ஹ்ங்கா டோங்கா ஹங்கா ஹாபய்' (Hunga Tonga Hunga Haapai) என்று அழைக்கப்படுகிறது.
- ✓ நீருக்கடியில் 2,383 கிமீ தொலைவில் இந்த எரிமலை அமைந்திருந்தபோதிலும், அதன் ஒலி டோங்காவில் கேட்டது. மேலும், இந்த வெடிப்பு காரணமாக சுனாமி அலைகள் உருவானது.

➢ **சீனாவின் செயற்கை சந்திரன் (நிலவு)**

✓ சீனாவின் செயற்கைச் சூரியன், நிஜ சூரியனை விட ஐந்து மடங்கு அதிக வெப்பத்தை அடைந்த பிறகு, சீனா தனது முதல் செயற்கை சந்திரனுடன் தயாராக உள்ளது.

✓ விஞ்ஞானிகள் 'செயற்கை சந்திரன்' ஆராய்ச்சி வசதியை உருவாக்கியுள்ளனர். காந்தத்தைப் பயன்படுத்தி குறைந்த புவியீர்ப்புச் சூழல்களை நடத்துவதற்கு இந்த வசதி அவர்களுக்கு உதவும்.

✓ **இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ)**

✓ ஜனவரி 20 அன்று, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் - ககன்யான் திட்டத்திற்கான உயர் உந்துதல் விகாஸ் இயந்திரத்தின் 25 வினாடி தகுதிச் சோதனையை வெற்றிகரமாக முடித்ததாகக் கூறியது.

✓ தகுதிச் சோதனையானது தமிழ்நாட்டில் மகேந்திரகிரியில் உள்ள இஸ்ரோ உந்துவிசை வளாகத்தில் அதன் பெயரளவிலான இயக்க நிலைமைகளுக்கு அப்பால் இயங்குவதன்மூலம் இயந்திரத்தின் வலிமை சரிபார்க்கப்பட்டது.

➢ **ப்ரிஸ்மாண்டிஸ் கிரேட்டாதுன்பர்கே (Pristimantis gretathunbergae)**

✓ பனாமா காட்டில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய வகை மழைத் தவளைக்கு ஸ்வீடன் நாட்டு சுற்றுச் சூழல் ஆர்வலர் கிரேட்டா துன்பெர் பெயரிடப்பட்டது.

✓ இந்த சிற்றினத்திற்கு ப்ரிஸ்மாண்டிஸ் கிரேட்டா துன்பர்கே அல்லது கிரேட்டா துன்பெர்க் ரெயின்.ஃபிராக் என்று பெயரிடப்பட்டது.

➢ **இந்தியாவின் முதலாவது வானிலை ஆபத்து மற்றும் பாதிப்பு அட்லஸ்**

✓ இந்தியா தனது முதல் காலநிலை பாதிப்பு அட்லஸைப் பெற்றுள்ளது.

✓ புனேயில் உள்ள இந்திய வானிலை ஆய்வுத் துறையின் காலநிலை ஆராய்ச்சி மற்றும் சேவைகள் அலுவலக விஞ்ஞானிகளால் இந்தியாவின் காலநிலை ஆபத்துகள் மற்றும் பாதிப்பு அட்லஸ் உருவாக்கப்பட்டுள்ளது.

✓ இது 14 தீவிர வானிலை நிகழ்வுகள் மற்றும் ஒவ்வொரு மாவட்டத்தின் உள்ளூர் மக்கள், வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரத்திற்கு அவை ஏற்படுத்தும் இடர்களை அடிப்படையாகக் கொண்டது.

➢ **மிகவும் பழமையான மனித புதை படிவங்கள்**

✓ சமீபத்திய ஆய்வின்படி, அறியப்பட்ட மிகப் பழமையான ஹோமியோ சேபியன் புதை படிவங்களில் ஒன்றான ஓமோ கிபிஷ் 1, முன்பு நினைத்ததைவிட சுமார் 35,000 ஆண்டுகள் பழமையானதாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

✓ ஓமோ கிபிஷ் 1, 1967இல் எத்தியோப்பியாவில் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது.

✓ நவீன மனிதனின் அனைத்து உருவவியல் பண்புகளையும் கொண்ட ஒரே புதைபடிவம் ஓமோ 1 ஆகும்.

➢ **மத்திய மருந்துகள் ஆராய்ச்சி நிறுவனம் 'ஓம்' என்ற ஓமிக்ரான் சோதனைக் கருவியை உருவாக்குகிறது.**

✓ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி கவுன்சில் (CSIR) – மத்திய மருந்துகள் ஆராய்ச்சி நிறுவனம் ஆனது, கொரோனா வைரசின் ஓமிக்ரான் மாறுபாட்டைப் பரிசோதிப்பதற்காக உள்நாட்டு ஆர்.டி- பிசிஆர் கண்டறியும் கருவியான 'ஓம்' ஒன்றை உருவாக்கியுள்ளது.

- ✓ இது ஒரு அரசு நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட முதல் கிட் ஆகும். மேலும் ஓமிக்ரான் இன் குறிப்பிட்ட சோதனைக்காக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட மூன்றாவது கிட்டும் ஆகும்.

### ➢ டிஜிட்டல் சன்சாத் செயலி (Digital SansadApp)

- ✓ ஜனவரி 27 அன்று, மக்களவை செயலகம் - நாடாளுமன்றத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளை நேரடியாக ஸ்ட்ரீம் செய்வதற்காக 'டிஜிட்டல் சன்சாத் செயலி'யை அறிமுகப்படுத்துகிறது.
- ✓ மக்களவையின் தினசரி அலுவல் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் ஒரே இடத்தில் சென்று பார்ப்பதற்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

### ➢ உலகின் முதலாவது இரட்டை முறை வாகனம்

- ✓ ஜப்பான் ஒரு மினபஸ் போன்று தோற்றமளிக்கும் உலகின் முதல் இரட்டைப் பயன்முறை வாகனத்தை அதன் நகரமான கையோவில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- ✓ சாலையில் சாதாரண ரப்பர் டயர்களால் அந்த வாகனம் ஓட முடியும். அதே சமயம் அதன் அடிப் பகுதியில் இருக்கும் இரும்புச் சக்கரங்கள், ரயில் தண்டவாளத்தைத் தட்டும்போது கீழே இறங்கும்.
- ✓

APOLLO STUDY CENTRE

# விளையாட்டுகள்

## ➢ 19 வயதுக்குக் குறைவானவர்களுக்கான ஆசிய கோப்பை

- ✓ டிசம்பர் 31, 2021 அன்று துபாய் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற, 19 வயதுக்குக் குறைவானவர்களுக்கான ஆசிய கோப்பைப் போட்டியில், இந்திய ஒன்பது விக்கெட் வித்தியாசத்தில் இலங்கையைத் தோற்கடித்து வென்றது.
- ✓ 19 வயதுக்குக் குறைவானவர்களுக்கான ஆசிய கோப்பையின் எட்டு பதிப்புகளில், இந்தியா எட்டு முறை வென்றது. இதில் 2012ஆம் ஆண்டு கூட்டாகப் பெற்ற கோப்பையும் அடங்கும்.

## ➢ தேசிய படகுப்போட்டி சாம்பியன்ஷிப்

- ✓ மகாராஷ்டிரா மாநிலம் புனேவில் நடைபெற்ற தேசிய படகோட்டுதல் சாம்பியன்ஷிப் போட்டியில் தமிழ்ச்செல்வி, ரோஸ் மஸ்டிகா மெரில், லாவண்யா நம்பியார் மற்றும் பகவதி ஆர் (தமிழ்நாடு) ஆகிய நால்வர் அணி மூன்றாவது இடத்தைப் பிடித்தது.

## ➢ தஸ்னிம் மிர் (Tasnim Mir)

- ✓ 16 வயது குஜராத் பெண், தஸ்னிம் மிர் - பெண்கள் பேட்மிண்டன் ஒற்றையர் பிரிவில் உலகின் நம்பர் 1 ஆக வரலாறு படைத்தார்.
- ✓ ஜனவரி 12 அன்று வெளியிடப்பட்ட உலக பேட்மிண்டன் கூட்டமைப்பு, 19 வயதுக்குக் குறைவானவர்களுக்கான தரவரிசையின்படி, தஸ்னிம் 10.810 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.
- ✓ இரண்டுமுறை ஒலிம்பிக் பதக்கம் வென்ற பிவி சிந்து மற்றும் லண்டன் வெண்கலம் வென்ற சாய்னா நேவால் உட்பட எந்த இந்திய பெண்ணாலும் தஸ்னிமின் சாதனையை இதுவரை முறியடிக்க இயலவில்லை.

## ➢ FIFA விருதுகள் 2021

- ✓ ஃபீஃபா விருதுகள் 2021இல் ராபர்ட் லெவன்டோவ்ஸ்கி உலகின் சிறந்த ஆண் வீரர்களுக்கான விருதைப் பெற்றார். ஃபீஃபா விருதுகள் 2021இல் பெண்கள் விருதில், அலெக்சியா புட்டெல்லாஸ் தனது பேலன் டி’ஆர் வெற்றியில் (Ballon d’Or victory) ஃபீஃபா கோப்பையைச் சேர்த்தார்.

## ➢ ஃபார்முலா இ-உலக சாம்பியன்ஷிப் (Formula E World Championship)

- ✓ ஃபார்முலா இ-உலக சாம்பியன்ஷிப் போட்டிகளை நடத்த ஐதராபாத் ஏலம் எடுத்துள்ளது.
- ✓ இந்த மின்சார கார் பந்தயத்தை நடத்த ஏலம் எடுக்கும் உலகெங்கிலும் உள்ள 60 நகரங்களில் இதுவும் ஒன்று ஆகும்.
- ✓ நவம்பர் 2022 மற்றும் பிப்ரவரி 2023க்கு இடையில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள மின்சார கார்களுக்காக பிரத்யேகமான ஃபார்முலா மின்சார உலக சாம்பியன்ஷிப்பை நடத்த ஐதராபாத் அதிகாரபூர்வமாக ஏலம் எடுத்தது.

## ➢ AFC மகளிர் கால்பந்து ஆசிய கோப்பை

- ✓ ஏஎப்சி மகளிர் ஆசிய கோப்பையின் 20வது பதிப்பு 20 ஜனவரி 2022 அன்று தொடங்கியது.
- ✓ 1979க்குப் பிறகு இரண்டாவது முறையாக இந்தியா இந்தப் போட்டியை நடத்துவதால் இந்தியாவிற்கு இது ஒரு சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

- **பத்ம விருதுகள்**

- ✓ நட்சத்திர பாரா தடகள வீரரான தேவேந்திர ஜஜாரியா, நாட்டின் மூன்றாவது உயரிய குடிமகன் விருதான பத்ம பூஷன் விருதுக்கு செவ்வாய்க்கிழமை தேர்வு செய்யப்பட்டார்.
- ✓ ஒலிம்பிக் போட்டிகளில் தங்கம் வென்ற ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ரா, பத்மஸ்ரீ விருதுக்குத் தேர்வு செய்யப்பட்ட எட்டு விளையாட்டு வீரர்களில் ஒருவர் ஆவார்.
- ✓ நீரஜ், பரம் விஷிஸ்ட் சேவா பதக்கமும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

- **சர்வதேச சையத் மோடி 2022**

- ஜனவரி 23 அன்று லக்னோவில் நடைபெற்ற சையத் மோடி இன்டர்நேஷனல் 2022 மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் முன்னணி பேட்மிண்டன் வீராங்கனையான பிவி சிந்து-மாளவிகா பன்சோட்டைத் தோற்கடித்துப் பட்டத்தை வென்றார்.

- **மெகா விளையாட்டு மாநகரம் (Mega Sports City)**

- ✓ சென்னையின் புறநகர்ப் பகுதியில் 500 ஏக்கர் பரப்பளவில் 700 கோடி ரூபாயில் மெகா விளையாட்டு மாநகரத்தை உருவாக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.
- ✓ இந்த விளையாட்டு நகரமானது சிறந்த தடகள தடங்கள், உட்புற சைக்கிள் ஓட்டும் வசதி, வேலோட்ரோம், ஹாக்கி மைதானம், கூடைப்பந்து, கைப்பந்து மற்றும் குத்துச் சண்டைக்கான பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம் போன்ற ஆடம்பரமான வசதிகளைக் கொண்டிருக்கும்.
- ✓ கிழக்குக் கடற்கரை சாலையில் சென்னைக்குத் தெற்கே சுமார் 30 கிமீ தொலைவில் திருவிடந்தை அருகே இந்த திட்டம் அமையவுள்ளது.

- **ஆசிய கோப்பை ஹாக்கி போட்டி**

- ✓ ஜனவரி 28 அன்று ஓமன் நாட்டின், மஸ்கட் நகரில் நடைபெற்ற 2022 மகளிர் ஆசிய கோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியா, சீனாவை 2-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து வெண்கலம் வென்றது.

- **ஆஷ்லே பார்ட்டி (Ashleigh Barty)**

- ✓ ஜனவரி 29 அன்று, ஆஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்டி – 44 ஆண்டுகளில் இந்த ஆண்டின் முதல் கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்ற முதல் ஆஸ்திரேலிய பெண்மணி என்ற வரலாற்றை எழுதினார்.
- ✓ ஆஸ்திரேலியாவின் மெல்போர்னில் உள்ள ராட் லாவர் அரங்கில் நடைபெற்ற ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தை உலகின் நம்பர் 1 வீரரான ஆஷ்லே பார்டி, 27ம் நிலை வீராங்கனையான அமெரிக்க வீராங்கனை டேனியல் காலின்சை வீழ்த்தி பட்டத்தை வென்றார்.

- **ஆஸ்திரேலிய ஓபன்**

- ✓ ஸ்பெயின் டென்னிஸ் ஜாம்பவான் ரஃபேல் நடால் - ஜனவரி 30ஆம் தேதி மெல்போர்னில் நடைபெற்ற ஆஸ்திரேலிய ஓபன் இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் உலக நம்பர் 2 டேனியல் மெட்வெடேவை வீழ்த்தி ராட் லேவர் அரங்கில் சரித்திரம் படைத்தார்.
- ✓ இந்த வெற்றியின்மூலம், 35 வயதான உலகின் நம்பர் 1 டென்னிஸ் வீரர், சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் மற்றும் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் ஆகியோரை முந்திச் சென்று 21 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்ற முதல் ஆண் டென்னிஸ் வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார்.

# இரங்கல் செய்திகள்

- **பண்டிட் பிர்ஜு மகாராஜ்**

✓ பழம்பெரும் கதக் நடனக் கலைஞர், பண்டிட் பிர்ஜு மகராஜ் தனது 83 வது வயதில் காலமானார். நாட்டின் இரண்டாவது உயரிய சிவிலியன் விருதான பத்ம விபூஷண் பெற்ற இவர், அவரது சீடர்களாலும், பின்பற்றுபவர்களாலும் அன்புடன் பண்டிட் ஜி அல்லது மகாராஜ் ஜீ என்று அழைக்கப்பட்டார். இந்தியாவின் தலைசிறந்த கலைஞர்களில் ஒருவர்.

- **எம்.கே. பிரசாத் M.K. Prasad**

✓ பிரபல சுற்றுச் சூழல் ஆர்வலர் எம்.கே. பிரசாத் காலமானார்.

✓ 1970களின் முற்பகுதியில் அமைதிப் பள்ள்த்தாக்கின் பசுமையான காடுகளைப் பாதுகாப்பதற்காக மாநிலம் முழுவதும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் அவர் முக்கிய பங்கு ஆற்றினார்.

✓ மாநிலத்தில் காடுகளின் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கான முதல் பிரபலமான பிரச்சாரமாகக் கருதப்படும் ‘அமைதிப் பள்ளத்தாக்கைப் பாதுகாப்போம்’ (Save Silent Valley) பிரச்சாரத்தில் அவர் தலைமைப் பங்காற்றினார்.

- **ஆர். நாகசுவாமி**

✓ புகழ்பெற்ற தொல்லியல் ஆய்வாளரும், கலை வரலாற்றாசிரியரும் மற்றும் கல்வெட்டு அறிஞருமான ஆர். நாகசாமி (91 வயத) – வயது மூப்பு தொடர்பான நோய்களால் சென்னையில் ஜனவரி 23 அன்று காலமானார்.

✓ 1959ஆம் ஆண்டு முதல் சென்னை அருங்காட்சியகத்தில் கலை மற்றும் தொல்லியல் துறைக்கான காப்பாளராக பணியாற்றிய நாகசாமி, பின்னர் 1963ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில தொல்லியல் துறையின் உதவி சிறப்பு அதிகாரியாகச் சேர்ந்தார்.

✓ இவர் தமிழக அரசின் ‘கலைமாமணி’ விருது உட்பட பல்வேறு விருதுகளைப் பெற்றவர் ஆவார்.

# அறிக்கை

- **உலக வேலைவாய்ப்பு மற்றும் சமூக கண்ணோட்டம் (World Employment and Social Outlook)**
- ✓ சர்வதேச தொழிலாளர் அமைப்பு, ‘உலக வேலைவாய்ப்பு மற்றும் சமூகக் கண்ணோட்டம்’ என்ற தனது அறிக்கையை வெளியிட்டது.
- ✓ இந்த அறிக்கையில் 2022ல் உலகளாவிய வேலையின்மை 207 மில்லினாக இருக்கும் என்று சர்வதேச தொழிலாளர் அமைப்பு கணித்துள்ளது.
- ✓ இது 2019ஐ விட கிட்டத்தட்ட 21 மில்லியன் அதிகம் ஆகும்.

- **இந்தியாவில் மின்சார வாகனங்கள் அறிக்கை**
- ✓ இந்திய ரிசர்வ் வங்கியின் கடன் வழிகாட்டுதலின் முன்னுரிமைப் பிரிவில் மின்சார வாகனங்களைச் சேர்க்க நித்தி ஆயோக் பரிந்துரைத்துள்ளது.
- ✓ இது மின்சார வாகனங்களுக்கான சில்லறைக் கடன்களுக்கு உந்துதலைக் கொடுக்கும்.
- ✓ நித்தி ஆயோக் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, 2025ஆம் ஆண்டுக்குள் மின்சார வாகனங்களின் நிதிச் சந்தை அளவு ரூ.40,000 கோடியாகவும், 2030ஆம் ஆண்டுக்குள் ரூ.3.7 இலட்சம் கோடியாகவும் உயரும்.

# இந்திய காடுகளின் நிலவர அறிக்கை 2021

- **இந்திய காடுகளின் நிலவர அறிக்கை 2021 (India State of Forest Report 2021)**
- ✓ சுற்றுச் சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத்துக்கான அமைச்சர், பூபேந்தர் யாதவ் - ஜனவரி 13, 2022 அன்று இந்திய வன ஆய்வு அமைப்பு (Forest Survey of India) தயாரித்த ‘இந்திய காடுகளின் நிலவர அறிக்கை 2021’ ஐ வெளியிட்டார்.
- ✓ இந்த அறிக்கையின்படி, நாட்டின் மொத்த காடு மற்றும் மரங்களின் பரப்பளவு 80.9 மில்லியன் ஹெக்டேர் ஆகும், இது நாட்டின் புவியியல் பரப்பில் 24.62 விழுக்காடு ஆகும்.

- ✓ **கடந்த இரண்டு ஆண்டுகளில், தமிழ்நாடு தனது காடுகளை 55 ச.கி.மீ பரப்பளவுக்கு விரிவுபடுத்தியுள்ளது. ஆனால் 406 சகிமீ மரங்களை இழந்துள்ளது.**
- ✓ நமது மாநிலம் அதன் மொத்த புவியியல் பரப்பில் 20 விழுக்காடு காடுகளைக் கொண்டு, காடுகளின் அடிப்படையில் நாட்டிலேயே ஒன்பதாவது இடத்தில் உள்ளது.
- ✓ சென்னையில் கடந்த 10 ஆண்டுகளில் மரங்களின் பரப்பளவு கிட்டத்தட்ட 1,200 ஏக்கர் அல்லது 5 சகிமீ அதிகரித்துள்ளதால் சென்னை பசுமையாக மாறியுள்ளது.

- **ஆக்ஸ்பாம் இந்தியாவின் ‘சமத்துவமின்மை பலி அறிக்கை’ (Oxfam India’s ‘Inequality Kills Report)**
- ✓ ஆக்ஸ்பாம் இந்தியாவின் புதிய அறிக்கையின்படி, மொத்தம் 4.6 கோடி இந்தியர்கள் - 2020ஆம் ஆண்டில் தீவிர வறுமையில் வீழ்ந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- ✓ அதே சமயம், இந்தப் பெருந்தொற்று காலத்தில், இந்திய பில்லியனர்களின் எண்ணிக்கை 102ல் இருந்து 143 ஆக அதிகரித்துள்ளது.
- ✓ இந்தியாவின் 100 பணக்காரர்களின் மொத்த சொத்து 2021இல் 57.3 இலட்சம் கோடி (775 பில்லின் டாலர்கள்) என்ற சாதனையை எட்டியுள்ளது.

- ✓ ஜனவரி 16 அன்று வெளியிடப்பட்ட ‘சமத்துவமின்மை பலி அறிக்கை: டாவோஸ் இந்தியா துணை அறிக்கை’ அடிப்படையில், இந்த விவரங்களை ஆக்ஸ்பாம் இந்தியா வெளியிட்டது.
- ✓ இந்த அறிக்கை ஜனவரி 17 அன்று உலகப் பொருளாதார மன்றத்தின் மெய்நகிர் நிகழ்வான ‘தி டாவோஸ் அஜெண்டா’வில் வெளியிடப்படும் உலகளாவிய அறிக்கையின் ஒரு பகுதியாகும்.
- ✓ இந்த அறிக்கையில் இந்தியா ‘மிகவும் சமத்துவமற்ற நாடு’ என்று விவரிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் இந்தியாவின் முதல் 10 பேர் செல்வத்தில் 57 விழுக்காட்டை வைத்திருக்கிறார்கள். அதே சமயம் கீழ் பாதியினர் 13 விழுக்காட்டையே வைத்திருக்கின்றனர்.

- ➢ **ஹென்லி கடவுச்சீட்டு அட்டவணை 2022 (Henley Passport Index 2022)**
- ➢ ஹென்லி கடவுச்சீட்டு அட்டவணை 2022ன்படி, ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் நாடுகள் - 2022ஆம் ஆண்டிற்கான உலகின் மிகவும் சக்திவாய்ந்த கடவுச் சீட்டு பட்டியலில் முதலிடத்தில் உள்ளன.
- ➢ இந்த இருநாடுகளின் குடிமக்கள் முன் விசா தேவையில்லாமல் 192 நாடுகளுக்குச் செல்லலாம்.
- ➢ **இந்தியாவின் காலநிலை – 2021**
- ✓ இந்திய வானிலை ஆய்வுத் துறை, ஜனவரி 21, 2022 அன்று ‘2021இல் இந்தியாவின் காலநிலை’ அறிக்கையை வெளியிட்டது.
- ✓ இந்த அறிக்கையின்படி, 1901இல் இந்தியாவில் நாடு தழுவிய பதிவுகள் தொடங்கியதில் இருந்து, 2021ஆம் ஆண்டு இந்தியாவின் ஐந்தாவது அதிக வெப்பமான ஆண்டாகும்.
- ✓ 2021ஆம் ஆண்டில் தீவிர வானிலை நிகழ்வுகளால் 1,750 உயிர்களை இழந்ததாக இந்தியா தெரிவித்துள்ளது.
- ✓ மாநிலங்களில் 350 இறப்புகளுடன், மகாராஷ்டிரா மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட மாநிலமாகும்.
- ✓ அதி தீவிர வானிலை நிகழ்வுகளில், மின்னல் மற்றும் இடியுடன்கூடிய மழையால் 787 பேர் உயிரிழந்தனர். அதைத் தொடர்ந்து வெள்ளம், கனமழை மற்றும் நிலச்சரிவுகளால் 759 பேர் இறந்தனர்.
- ✓ 2021ஆம் ஆண்டில் வெவ்வேறு மாநிலங்களில் 172 இறப்புகளுக்கு சூறாவளி காரணமாக இருந்தள்ளது.

- ➢ **மின்சார சந்தை அறிக்கை**
- ✓ உலகளாவிய மின்சாரத் தேவை – சர்வதேச எரிசக்தி நிறுவனம் வெளியிட்ட இருவருட மின் சந்தை அறிக்கையின் அடிப்படையில், 2021ஆம் ஆண்டில் ஆண்டுக்கு ஆண்டு 6 விழுக்காடாக அதிகரித்துள்ளது.
- ✓ உலகளாவிய ஆற்றல் தீவிரம் (Global energy intensity) ஆண்டுக்கு ஆண்டு 1.9 விழுக்காடு குறைந்துள்ளது. இது 2050க்குள் நிகர பூஜ்ஜியத்திற்கான அடித்தளத்தை அமைப்பதற்குத் தேவையான அளவோடு ஒப்பிடுகையில் பாதியாக உள்ளது.
- ✓ 2021ஆம் ஆண்டில், புதுப்பிக்கத்தக்க ஆதாரங்களில் இருந்து மின்சார உற்பத்தி ஆண்டுக்கு ஆண்டு 6 விழுக்காடு அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் நிலக்கரி உற்பத்தி 9 விழுக்காடு அதிகரித்துள்ளது.

# தரவரிசைப் பட்டியல்

➢ **இந்தியாவின் கடவுச் சீட்டு தரவரிசை**

- ✓ 2021ஐக் காட்டிலும் இந்த காலாண்டில் இந்தியாவின் கடவுச் சீட்டு திறன் மேம்பட்டுள்ளது.
- ✓ கடந்த ஆண்டு 90வது இடத்தில் இருந்த நமது நாடு, ஹென்லி கடவுச் சீட்டு அட்டவணையில் 7 இடங்கள் முன்னேறி இப்போது 83வது இடத்தில் உள்ளது.
- ✓ இருப்பினும், 2020இல், அதன் தரவரிசை 84 ஆக இருந்தது, 2016இல், மாலி மற்றும் உஸ்பெகிஸ்தானுடன் இந்தியா 85வது இடத்தைப் பிடித்தது. ஜப்பானும் சிங்கப்பூரும் இந்தக் குறியீட்டில் முதலிடம் வகிக்கின்றன.

➢ **சிறந்த 10 உலகளாவிய செயற்கை நுண்ணறிவு தத்தெடுப்பாளர்களில் இந்தியா இடம் பெற்றுள்ளது.**

- ✓ தி புரூக்கிங்ஸ் நிறுவனம் வெளியிட்ட ஆய்வு கண்டுபிடிப்புகளின்படி, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் நிதியுதவியின் அடிப்படையில் உலகின் முதல் 10 நாடுகளில் இந்தியாவும் உள்ளது.
- ✓ செயற்கை நுண்ணறிவுக்கான செலவுகள் மற்றும் முதலீடுகளின் அடிப்படையில் இது ஆறாவது இடத்தில் உள்ளது.
- ✓ இந்தியாவை விட செயற்கை நுண்ணறிவு சாதனைகளில் முன்னணியில் இருக்கும் நாடுகள் அமெரிக்கா, சீனா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான் மற்றும் ஜெர்மனி ஆகும்.

➢ **மிகவும் பிரபலமான உலகளாவிய தலைவர்**

- ✓ அமெரிக்க ஆலோசனை நிறுவனமான மார்னிங் கன்சல்ட் நடத்திய ஆய்வின்படி, பிரதமர் நரேந்திர மோடி – 71 விழுக்காடு ஒப்புதல் மதிப்பீட்டுடன் மிகவும் பிரபலமான உலகளாவிய தலைவராக தரவரிசைப்படுத்தப்பட்டார்.
- ✓ அவரைத் தொடர்ந்து மெக்சிகோவின் ஆண்ட்ரேஸ் மானுவல் லோபஸ் ஓப்ரடோர் (66 விழுக்காடு), இத்தாலியின் மரியோடிராகி (60 விழுக்காடு) மற்றும் ஜப்பானின் ∴புமியோ கிஷிடா (48 விழுக்காடு) ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.
- ✓ 21 விழுக்காடு கண்காணிக்கப்பட்ட அனைத்து தலைவர்களிலும் பிரதமர் மோடி மிகக் குறைந்த மறுப்பு மதிப்பீடுகளைப் பெற்றுள்ளார்.

➢ **சர்வதேச ஊழல் குறியீடு**

- ✓ சர்வதேச வெளிப்படைத் தன்மை (Transparency International's) ஊழல் குறியீட்டில் இந்தியா 85வது இடத்தில் உள்ளது. 40 மதிப்பெண்களுடன் சர்வதேச வெளிப்படைத் தன்மை நிறுவனத்தின் ஊழல் புலனாய்வு குறியீட்டில் 2021இல் இந்தியா 85வது இடத்தில் உள்ளது.
- ✓ இந்தியாவின் நிலைமை 'குறிப்பாக கவலைக்குரியதாக' இந்த அறிக்கை மேற்கோள் காட்டுகிறது.

# முக்கிய தினங்கள்

| நாள் | நேரம் | மையக் கருத்து |
|---|---|---|
| ஜனவரி 1 | **உலகளாவிய குடும்ப தினம்** | அமைதி மற்றும் பங்களிப்பு தினமாக இந்நாள் கொண்டாடப்படுகிறது. |
| ஜனவரி 4 | **உலக பிரெய்லி தினம்** | உலக பிரெய்லி தினம். இது பார்வையற்றோர் மற்றும் பகுதியளவு பார்வை உள்ளவர்களுக்கான தகவல் தொடர்பு ஊடகமாகச் செயல்படுகிறது. |
| ஜனவரி 6 | **உலக போர் ஆதரவற்றோர் தினம்** | போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளின் அவல நிலை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக உலக போர் ஆதரவற்றோர் தினம் கொண்டாடப்படுகிறது. |
| ஜனவரி 9 | **பிரவசி பாரதிய திவாஸ்** | நாட்டின் வளர்ச்சியில் வெளிநாட்டு இந்திய சமூகத்தின் பங்களிப்பைக் குறிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் பிரவசி பாரதிய திவாஸ் (Pravasi Bharatiya Divas) கொண்டாடப்படுகிறது. |
| ஜனவரி 10 | **உலக இந்தி தினம்** | |
| ஜனவரி 11 | **தேசிய மனிதக் கடத்தல் விழிப்புணர்வு தினம்** | மனிதக் கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களின் அவலநிலை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், அவர்களின் உரிமைகளை மேம்படுத்துவதையும் பாதுகாப்பதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| ஜனவரி 12 | **தேசிய இளைஞர் தினம்** | இந்தியாவில், சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாளை நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் ஜனவரி 12ஆம் தேதி தேசிய இளைஞர் தினம் கொண்டாடப்படுகிறது. |
| ஜனவரி 14 | **ஆயுதப்படை வீரர்கள் தினம்** | தேச சேவையில் நமது படைவீரர்களின் தன்னலமற்ற அர்ப்பணிப்பு மற்றும் தியாகத்தை அங்கீகரித்து கௌரவிப்பதே இந்த நாளின் நோக்கமாகும். |
| ஜனவரி 15 | **இந்திய இராணுவ தினம்** | நாட்டையும் அதன் குடிமக்களையும் பாதுகாக்க தங்கள் இன்னுயிர்களை தியாகம் செய்த போர் வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் இந்தியாவில் ராணுவ தினம் |

| | | |
|---|---|---|
| | | ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு 74வது இந்திய ராணுவ தினம் கொண்டாடப்படுகிறது. |
| ஜனவரி 15 | **திருவள்ளுவர் தினம்** | |
| ஜனவரி 16 | **தேசிய தொடக்கநிலை நாள்** | ஜனவரி 15 அன்று, புதிய இந்தியாவின் முதுகெலும்பாக இருக்கும் ஜனவரி 16 ஆம் தேதி ‘தொடக்கநிலை தினமாக’ கொண்டாடப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார். |
| ஜனவரி 19 | **தேசிய பேரிடர் மீட்புப் படை எழுச்சி தினம் 2022** | தேசிய பேரிடர் மீட்புப் படை (National Disaster Response Force) ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 19 அன்று தன்னுடைய எழுச்சி தினத்தைக் கொண்டாடுகிறது. |
| ஜனவரி 24 | **தேசிய பெண் குழந்தை தினம்** | இந்திய சமுதாயத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் ஏற்றத் தாழ்வுகள் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை பரப்புவதை நோக்கமாகக் கொண்டே இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது. |
| ஜனவரி 24 | **சர்வதேச கல்வி தினம்** | 2022ஆம் ஆண்டில் 4வது சர்வதேச கல்வி தினத்தின் மையக் கருத்து பாடத்தை மாற்றுதல், கல்வியை மாற்றுதல் என்பதாகும். ஐ.நா கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு (யுனெஸ்கோ) தலைமையில் இந்த கொண்டாட்டம் நடத்தப்படுகிறது. |
| ஜனவரி 25 | **தேசிய வாக்காளர் தினம் 2022** | தேசிய வாக்காளர் தினம் புதிய வாக்காளர்கள் தங்களை தேர்தல் நடைமுறையில் இணைத்துக் கொள்ள ஊக்குவிப்பதற்காக அனுசரிக்கப்படுகிறது. |
| ஜனவரி 25 | **இந்தியாவின் தேசிய சுற்றுலா தினம்** | நாட்டின் பொருளாதாரத்திற்கு சுற்றுலாவின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்திய அரசு, ஜனவரி 25ஆம் தேதிய தேசிய சுற்றுலா தினமாக அறிவித்தது. |
| ஜனவரி 26 | **73வது குடியரசு தினம்** | 1950ஆம் ஆண்டு இதே நாளில்தான் இந்திய அரசியலமைப்புச் சட்டம் அமலுக்கு வந்தது. இதனால் இந்தியா இறையாண்மை கொண்ட நாடாக, குடியரசாக அறிவித்துக் |

| | | |
|---|---|---|
| | | கொண்டது. |
| ஜனவரி 28 | **லாலா லஜபதி ராயின் 157வது பிறந்த நாள்** | |
| ஜனவரி 30 | **தியாகிகள் தினம்** | இந்த நாள் மகாத்மா காந்தியின் நினைவு நாளைக் குறிக்கிறது. |
| ஜனவரி 30 | உலக தொழுநோய் தினம் | இந்த ஆண்டு உலக தொழுநோய் தினத்தின் கருப்பொருள் 2022ஆம் ஆண்டு 'கண்ணியத்திற்காக ஒன்றுபட்டது' என்பதாகும். |
| ஜனவரி 31 | **தேசிய மகளிர் ஆணையம் நிறுவன தினம்** | 2022ஆம் ஆண்டிற்கான மையக் கருத்து, 'அவளே, மாற்றத்தை ஏற்படுத்துபவள்' (She The Change Maker) என்பதாகும். |

# பல்வகைப் பொருட்கள்

- **2021ஆம் ஆண்டின் குழந்தைகளுக்கான வார்த்தை**
  - ✓ ஆகஸ்போர்டு யுனிவர்சிட்டி பிரஸ் நிறுவனம் தன்னுடைய சமீபத்திய ஆராய்ச்சியின் அடிப்படையில், 2021ஆம் ஆண்டின் குழந்தைகளுக்கான சிறந்த வார்த்தையாக 'கவலை' (Anxiety) ஐ தேர்வு செய்துள்ளது.

- **ஜெய்பீம் மற்றும் மரக்கர் - ஆஸ்கார் விருதுகள் 2022**
  - ✓ இந்திய திரைப்படங்களாகிய ஜெய்பீம், மரக்கர் மற்றும் அரபிக்கடலின் சிம்ஹாம் ஆகியவை ஆஸ்கார் விருதுகள் 2022 க்கு அதிகாரபூர்வமாகத் தேர்வு செய்யப்பட்டன.
  - ✓ மதர் இந்தியா, சலாம் பாம்பே, லகான் ஆகிய படங்களைத் தொடர்ந்து ஆஸ்கார் விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்ட நான்காவது இந்திய திரைப்படம் ஜெய் பீம் ஆகும்.